விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-008)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 30 வெள்ளிக்கிழமை (14.08.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 239

### முள்ளிவாய்க்கால் மண்ணை வணங்கி
## பாராளுமன்ற பயணத்தை ஆரம்பித்தார் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்



(முள்ளிவாய்க்கால்)

நடைபெற்று முடிந்த பாராளுமன்ற தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருக்கின்ற வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சரரன சி.வி.விக்னேஸ்வரன் பாராளுமன்றம் செல்வதற்கு முன்னதாக பல்லாயிரக் கணக்கான மக்கள் 2009இல் உயிர் நீத்த ▶23

## செஞ்சோலை நினைவேந்தலுக்கு பொலிஸார் தடை விதிப்பு

(முல்லைத்தீவு)

செஞ்சோலை படுகொலையின் 14ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த முடியாது என புதுக்குடியிருப்பு பொலிஸார் ▶23

## பாராளுமன்றம் செல்லும் முன்னணி உறுப்பினர்கள்
### முள்ளிவாய்க்கால் மண்ணில் நாளை உறுதிப் பிரமாணம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து போட்டியிட்டு பாராளுமன்றம் ▶23

## மன்னாரில் பெண்ணின் சடலம் மீட்பு

(மன்னார்)

மன்னார் உப்பளத்திற்கு சொந்தமான உப்பு உற்பத்தி பாத்தியில் இருந்து பெண் ஒருவரின் சடலம் நேற்று வியாழக்கிழமை மதியம் நீரில் மிதந்த நிலை ▶23

## சபாநாயகராக மைத்திரி?

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சபாநாயகராக தெரிவாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

நேற்று முன்தினம் புதிய அர ▶23

# சர்வாதிகார ஆட்சியை அரசு முன்னெடுக்கின்றது
## நீதி கிடைக்கும் வரை போராடுவோம்
### முள்ளிவாய்க்கால் மண்ணில் விக்னேஸ்வரன்

- இறுதி யுத்தத்தில் உயிரிழந்தவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்.
- தமிழர்களுக்கான நீதியில்தான் எமக்கான அரசியல் தீர்வு அமையும்.
- ஹிட்லர் போன்று கோட்டா சர்வாதிகார ஆட்சியை முன்னெடுக்கக்கூடும்.

முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முள்ளிவாய்க்காலில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் நேற்று முற்பகல் அஞ்சலி செலுத்தி தனது பாராளுமன்றத்துக்கான பயணத்தை ஆரம்பித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியில் அஞ்சலி செலுத்திய தன் பின்னர் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்தவர்களால்தான் நாட்டில் இனப்படுகொலை நடைபெற்றது என சர்வதேசம் அறிய முடிந்தது.

எமக்கு நடந்த இனப்படுகொலைதான் நாம் எவ்வாறு வாழப் போகிறோம், எவ்வாறான அரசியல் தீர்மானங்கள் கிடைக்கப் போகின் ▶23

# பொதுமக்கள், அரசியல்வாதிகளை வழிநடத்தும் ஒரு பொறிமுறையை உருவாக்க அணி திரளுங்கள்
## தமிழ் மக்களிடம் தமிழ் மக்கள் பேரவை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பொதுமக்கள், அரசியல்வாதிகளை வழிநடத்தும் பொறிமுறையை உருவாக்க தமிழ் மக்கள் அனைவரும் அணிதிரள வேண்டும் என தமிழ் மக்கள் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

ஒருவரை பழி தீர்ப்பதற்காக ஊடகங்களைப் பயன்படுத்துவது அறம் ஆகாது என்றும் தெரிவித்துள்ளது.

தமிழ் மக்கள் பேரவையினால் வெளியிடப்பட்ட விசேட அறிக்கை ▶23

## பாடசாலை மாணவனுக்கு கொரோனா கண்டுபிடிப்பு
### சமூக மட்டத்தில் இலங்கையில் தொற்று

(கொழும்பு)

இலங்கையில் நேற்று சமூக மட்டத்தில் கொரோனா நோயாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இராஜாங்கனைப் பிரதேசத்தில் கொரோனா தொற்றுக்குள்ளான ▶23

### யாரையும் மாற்றக்கூடாது
## புதிய அமைச்சர்களுக்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

தற்போது அரச நிறுவனங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள தலைவர்கள், இயக்குநர்கள், குழுவின் உறுப்பினர்கள் ஒருவரையும் எனது அனுமதியின்றி மாற்றக்கூடாது என புதிய அமைச்சர்களுக்கு ஜனாதிபதி ▶24

## மாவை - சுமந்திரனிடையே இணக்கம் ஏற்படுத்த முயற்சி
### நேற்றிரவு பல மணிநேரம் காரசாரமான பேச்சு நடைபெற்றது

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனிற்குமிடையிலான சமரசப் பேச்சுவார்த்தை நேற்றிரவு பல மணிநேரமாக நடைபெற்றது.

யாழ்.புறநகர் பகுதியில் உள்ள வைத்தி ▶24

# கேள்வி அறிவித்தல்
# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
# 2020

01. தலைவர்,பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்தும், வழங்குநர்களிடமிருந்தும் முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வீதி வேலைகளுக்காகக் கோரப்படுகின்றது.

02. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட **04/2016(ii)** ஆம் இலக்க 08.05.2019 ஆந் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடமாகாணத்தை சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும். மேலும் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளில் வேண்டப்படும் தரம் அட்டவணையில் குறிப்பிட்டவாறு இல்லாதவிடத்து அதனிலும் கூடிய தரம் சமர்ப்பித்த கேள்விகள் பரிசீலிக்கப்படலாம்.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வீதி புனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவுஅட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி **V** இல் காட்டப் பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் (தொலைபேசி - 021 224 0017) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 14.08.2020 தொடக்கம் 27.08.2020 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் 15.00 மணி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் இடத்திலிருந்து 14.08.2020 திகதியிலிருந்து 27.08.2020ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**3000/-** (வரி நீங்கலாக)இனைச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

07. பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து தனித்தனியாக இரு உறைகளில் இட்டு 28.08.2020ம் திகதி பி.ப 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந் தாழ்த்தப்பட்ட கேள்வி நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.

08. கோரப்பட்ட வேலைகளில் 1 தொடக்கம் 12 வரையான கேள்விகளுக்கு கேள்வி செல்லுபடியாகும் காலம், கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 49(நாற்பத்து ஒன்பது – 16.10.2020)நாட்களும், 13 இல் குறிப்பிடப்பட்ட கேள்விக்கு செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77(எழுபத்தேழு – 13.11.2020) நாட்களாகும்.

09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப் பட்டவாறு அமையும்.

| தொ. இல. | வேலை விபரம் மற்றும் கேள்வி இல. | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம்(வீதி) | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லு படியாகும் காலம் |
| 1. | மாரியப்புலம் கிளை வீதி, தாவடி வடக்கு NP/14/41(15)/02/05/PC/2020/11 | 0.576 Mn | 60 நாட்கள் | C9 / C8 | 6,000.00 | 13.11.2020 |
| 2. | சாயிபாபா ஒழுங்கை, தாவடி வடக்கு NP/14/41(15)/02/05/PC/2020/12 | 0.890 Mn | 60 நாட்கள் | C9 / C8 | 9,000.00 | 13.11.2020 |
| 3. | முருகமூர்த்தி குறுக்கு வீதி, உடுவில் மத்தி NP/14/41(15)/02/05/PC/2020/13 | 1.267 Mn | 60 நாட்கள் | C9 / C8 | 13,000.00 | 13.11.2020 |
| 4. | மல்வம் 5ம் வீதி, உடுவில் மத்தி NP/14/41(15)/02/05/PC/2020/14 | 0.811 Mn | 60 நாட்கள் | C9 / C8 | 8,500.00 | 13.11.2020 |
| 5. | அரசடி அம்மன் முன்வீதி - ஏழாலை, புளியங்கிணற்றடி புன்னாலைக்கட்டுவன் குறுக்கு வீதி (ஞானகலா சனசமூக நிலையத்திற்கு அருகில் உள்ள வீதி) – குப்பிளான் தெற்கு NP/14/41(15)/02/05/PC/2020/15 | 1.018 Mn | 60 நாட்கள் | C9 / C8 | 10,500.00 | 13.11.2020 |
| 6. | கடவைப்புலம் 1ம் குறுக்கு வீதி – சுன்னாகம் நகர் கிழக்கு, எரிபொருள் நிரப்பு நிலைய அருகாமை வீதி NP/14/41(15)/02/05/PC/2020/16 | 0.771 Mn | 60 நாட்கள் | C9 / C8 | 8,000.00 | 13.11.2020 |
| 7. | ஆர்க் வீதி 1ம் குறுக்கு வீதி – உடுவில் வடமத்தி NP/14/41(15)/02/05/PC/2020/17 | 0.456 Mn | 60 நாட்கள் | C9 / C8 | 4,600.00 | 13.11.2020 |
| 8. | தம்பிப்பிள்ளை மணியகாரன் 1ம் குறுக்கு வீதி புன்னாலைக்கட்டுவன் தெற்கு NP/14/41(15)/02/05/PC/2020/18 | 1.098 Mn | 60 நாட்கள் | C9 / C8 | 11,000.00 | 13.11.2020 |
| 9. | பூவோடை 7ம் ஒழுங்கை - சுன்னாகம் நகர் தெற்கு NP/14/41(15)/02/05/PC/2020/19 | 1.293 Mn | 60 நாட்கள் | C9 / C8 | 13,000.00 | 13.11.2020 |
| 10. | கொத்தியாவத்தை பூதவராயர் ஆலய வீதி, சுன்னாகம் நகர் மேற்கு NP/14/41(15)/02/05/PC/2020/20 | 0.999 Mn | 60 நாட்கள் | C9 / C8 | 10,000.00 | 13.11.2020 |
| 11. | சிவகுரு வீதி – ஏழாலை கிழக்கு, பூதவராயர் வீதி 1ஆம் ஒழுங்கை – ஏழாலை மத்தி NP/14/41(15)/02/05/PC/2020/21 | 0.939 Mn | 60 நாட்கள் | C9 / C8 | 9,500.00 | 13.11.2020 |
| 12. | கல்லூரி முன்பக்க வீதி – கந்தரோடை NP/14/41(15)/02/05/PC/2020/22 | 1.595 Mn | 60 நாட்கள் | C9 / C8 | 16,000.00 | 13.11.2020 |
| 13. | வீதி மின் விளக்கு வழங்குதல் NP/14/41(15)/02/05/Street light/2020/01 50W LED – 202 Nos | 1.995 Mn | 60 நாட்கள் | அங்கீகரிக் கப்பட்ட நிறுவனம் | 20,000.00 | 11.12.2020 |

10. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் 21.08.2020ம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.

க.தர்ஷன் - தலைவர்
பிரதேச சபை பெறுகைக்குழு
வலிகாமம் தெற்கு பிரதேச சபை சுன்னாகம்.

14.08.2020.

(C-044)

## தங்குமிட விடுதியில்
# இரு பெண்கள் உட்பட நால்வர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

பாலியல் தொழிலில் ஈடுபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டில் தென்னிலங்கை பெண்கள் இருவர் உட்பட நால்வர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தங்குமிட விடுதியில் தனித்திருந்த இரு பெண்களை யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்று (13) கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்களிடம் பொலிஸார் மேற் கொண்ட விசாரணைகளில், இரு இளைஞர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரு பெண்களும் 20 மற்றும் 25 வயதுடையவர்கள் என்பதுடன் கொழும்பு மற்றும் புத்தளம் பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். (ம-3,8,101,114)

# புதிய வர்த்தகக் கொள்கை விரைவில் அறிமுகப்படுத்தப்படும்
## வர்த்தக அமைச்சர் பந்துல

(கொழும்பு)

புதிய வர்த்தகக் கொள்கை விரைவில் அறிமுகப் படுத்தப்படும் என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

வர்த்தக அமைச்சில் நேற்று வியாழக்கிழமை தமது கடமைகளை ஆரம்பித்து உரையாற்றும் போது இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுக்கு பொருத்தமற்ற சட்டவிரோத வர்த்தக ஒப்பந்தங்களை இரத்து செய்து, மக்களின் நலனுக்காக புதிய சட்டங்களும், பிரகடனங்களும் அறிமுகப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கத்தின் அமைச்சர்கள் பலர் உத்தியோகபூர்வமாக நேற்றைய தினம் கடமைகளை பொறுப்பேற்றிருந்தமை குறிப்பிடத் தக்கது. (ம-03)

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 07 - 10 - 1925



மறைவு 02 - 07 - 2020

அமரர்
# செல்லத்துரை பாக்கியம்
(காலஞ்சென்ற முறிவு நெரிவு வைத்தியர் மனைவி)

கடந்த 02.07.2020ம் திகதியன்று சிவபதமடைந்த எமது அன்னையின் இறுதிச் சடங்கில் கலந்து அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 14.08.2020ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 5 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். நாளை 15.08.2020ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(C-045)

மருதங்கேணி வீதி, சந்தாதோட்டம்,
புலோலி வட கிழக்கு, புலோலி.

அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.


# வடக்கு-கிழக்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள்

# கொள்கை ரீதியாகவேனும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்

## இல்லையேல் எமது நிலம் பறிபோவது உறுதி - சுரேஷ்

(பனிக்கன்குளம்)

**எந்தவிதமான பிரயோசனமும் இல்லாத அமைச்சரவை உருவாக்கப்பட்டுள்ளது. இந்தஅரசின் அமைச்சரவை முழுக்க முழுக்க சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினை நிறுவக்கூடிய வகையில் குடும்ப ஆட்சியினை நிலை நிறுத்தக்கூடிய வகையிலும் தான் இந்த ஆட்சியின் அமைச்சரவை உருவாக்கப்பட்டுள்ளது எனத் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பங்காளி கட்சி தலைவரான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்**



நடைபெற்று முடிந்த பாராளுமன்ற தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்ற தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் கூட்டணியின் கட்சித் தலைவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் வருகைதந்து நேற்று முற்பகல் 11 மணியளவில் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் அகவணக்கம் செலுத்தி சுடரேற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

எந்தவிதமான பிரயோசனமும் இல்லாத அமைச்சரவை உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அரசின் அமைச்சரவை முழுக்க முழுக்க சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினை நிறுவக்கூடிய வகையில் குடும்ப ஆட்சியினை நிலை நிறுத்தக்கூடிய வகையிலும்தான் இந்த ஆட்சியின் அமைச்சரவை உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் எதிர்காலம் என்பது மிகவும் கேள்விக்குரிய காலகட்டமாக இருக்கின்றது. தமிழ் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளார்கள். குறிப்பாக முல்லைத்தீவு மண் பறிபோகக்கூடிய நிலை இருக்கின்றது.

அதற்கான பல்வேறு வேலைத்திட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இப்போது பாராளுமன்றம் சென்றுள்ள அனைத்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் முக்கியமான கடமை தமிழ் மக்களின் இருப்புக்களை பாதுகாப்பது தமிழர்களின் மண் பாதுகாக்கப்பட வேண்டும். வடக்கு-கிழக்கு நிலத்தொடர்ச்சி என்பது பாதுகாக்கப்படவேண்டும்.

இதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவேண்டும். இதற்காக உலகத்தின் ஒத்துழைப்புக்கள் பெற்றுக்கொள்ளப் பட வேண்டும்.

வந்துள்ள அரசு சிங்கள பௌத்த மேலாதிக்கத்தினை நிலை நிறுத்துவதற்கான அரசாங்கம். தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் குறைந்தபட்சம் கொள்கை ரீதியாக இவ்வாறான விடயங்களில் ஒன்றிணைய வேண்டும். அவ்வாறு ஒன்றிணையாமல் தனித்து செயற்படுவோம் என்பது வெளியில் பேச்சளவில் சரியாக இருந்தாலும் செயற்பாட்டினை பொறுத்தமட்டில் வடக்கு - கிழக்கினை சேர்ந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் சரி வடக்கு - கிழக்கின் தனித்துவங்களும் அந்த மண்ணின் இருப்பும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது மிக முக்கியமான விடயமாகும். இந்த விடயத்தில் ஒற்றுமையாக செயற்படவேண்டிய தேவையுள்ளது.

இல்லாவிட்டால் கடுமையான நிலையினை எதிர்நோக்கும் கட்டத்தில் நாங்கள் செல்ல வேண்டியிருக்கும் என்றும் சுரேஷ் மேலும் தெரிவித்தார். (2-281)

# திருநெல்வேலி சந்தையில் திருட்டுகள் அதிகரிப்பு

# கட்டுப்படுத்த சி.சி.ரி.வி.கமராக்கள்

(குப்பிழான்)

திருநெல்வேலிப்பொதுச் சந்தையில் அதிகரித்து வரும் திருட்டுச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பொதுச் சந்தை வளாகம் முழுவதும் 103 சி.சி.ரி.வி.கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் தா.தியாகமூர்த்தி தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை முதல் இந்த சி.சி.ரி.வி.கமராக்கள் செயற்பட ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேற்படி பொதுச் சந்தை வியாபாரிகள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட பின்னர் மீதமுள்ள மரக்கறிகள் உள்ளிட்ட பொருட்களை வியாபாரிகள் மூடைகளில் கட்டி வைத்து விட்டுச் செல்லும் நிலையில் இரவு வேளைகளில் மரக்கறிகள் களவாடப்படுவதாக நல்லூர் பிரதேச சபை நிர்வாகத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இதனையடுத்தே நல்லூர் பிரதேச சபை நிர்வாகம் வியாபாரிகளின் நலனைக் கருத்திற்கொண்டு மேற்படி நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

இதற்கமைய மேற்படி சபையின் 35 இலட்சம் ரூபா நிதிப் பங்களிப்பில் திருநெல்வேலி பொதுச் சந்தையில் 103 சி.சி.ரி.வி.கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் மேலும் தெரிவித்தார். (2-18)


நன்றி கூறுகின்றேன்



V.K.விக்னேஸ்

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் 2020 இல் ஓர் வேட்பாளனாக களமிறங்கிய எனக்கு தோளோடு தோள் நின்று உதவிய நல்லுள்ளங்கள் மற்றும் எனக்கு வாக்களித்த வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது மனங்கனிந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன். கடந்த காலங்களைப்போல் உங்களில் ஒருவனாக உங்களுடன் உடனிருந்து உங்களுக்காக சேவையாற்றுவேன். உங்களின் ஆதரவிற்கும், அன்பிற்கும் மீண்டும் ஒருமுறை என்னுடைய மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்..

V.K.விக்னேஸ்

(C-040)


# கம்பத்துடன் மோதிய ஆட்டோ

# விபத்தில் ஒருவர் காயம்

(நெளுக்குளம்)

வவுனியாவில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மதவாச்சி பகுதியிலிருந்து வவுனியா நோக்கி வந்த ஆட்டோ ஈரட்டைப் பெரியகுளம் பகுதியில் கட்டுப்பாட்டை இழந்து வீதிக்கரையில் இருந்து மின்சாரத் தூணுடன் மோதி விபத்திற்குள்ளாகியது.



விபத்தில் ஆட்டோ சாரதி காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

விபத்து தொடர்பாக ஈரட்டைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2-299)

# மக்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வகையில் பணி தொடரும்

## கடமைகளைப் பொறுப்பேற்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(கொழும்பு)

அரசியல்வாதி என்ற அடிப் படையிலும் அமைச்சர் என்ற வகையிலும் இரண்டு வகை யான பொறுப்புக்கள் தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவை இரண்டையும் நிறை வேற்றுவதற்கு அனைத்து நட வடிக்கைகளும் எதிர்காலத் தில் மேற்கொள்ளப்படும் என் றும் அமைச்சர் டக்ளஸ் தேவா னாந்தா தெரிவித்தார்.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சு அலுவலகத்தில் நேற்று கடமைகளைப் பொறுப் பேற்றுக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது இதனைத் தெரிவித்தார்.

"அமைச்சர் என்கின்ற வகையில் நாடளாவிய ரீதியில் சுமார் 15 மாவட்டங்களில் வாழ் ந்து வருகின்ற கடற்றொழி லாளர்கள் தொடர்பான விவ காரங்களில் அவதானம் செலு த்த வேண்டியிருப்பதுடன், நன் னீர் நிலைகளில் நீர் வேளா ண்மையை விருத்தி செய் வது தொடர்பிலும் அவதா னம் செலுத்த வேண்டிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு ள்ளது.

அதேபோன்று, ஒரு அரசி யல்வாதி என்ற வகையில் எதிர்பார்ப்புக்களுடன் மக்க



ளினால் தெரிவு செய்யப்பட்ட நான், தமிழ் பேசும் மக்கள் எதிர்கொள்ளுகின்ற அன்றாடப் பிரச்சினை - அபிவிருத்தி - அரசியல் தீர்வு ஆகிய விட யங்களுக்கும் தீர்வினை பெற் றுக் கொடுக்க வேண்டிய பொறுப்பில் இருக்கின் றேன்.

எனவே, தற்போது நாட்டில் அமைந்துள்ள நிலையான அர சாங்கத்தின் ஊடாக, பொரு த்தமான சூழலை உருவா க்குதல் மற்றும் உருவாகின்ற சூழலை பயன்படுத்துதல் என்ற என்னுடைய நீண்ட நாள் கோட்பாட்டின் அடிப்படை யிலும் தென்னிலங்கை கட்சி களுடன் கட்டியெழுப்பியு ள்ள தேசிய நல்லிணக்கத்தின் ஊடாகவும் என்னிடம் வழ ங்கப்பட்டுள்ள பொறுப்புக் கள் அனைத்தையும் நிறை வேற்றுவேன் எனவும் அவர் மேலும் தெரிவித் தார். (2)

# வைத்தியர்களை நியமிக்கக்கோரி திங்கள் ஆர்ப்பாட்டம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் வைத்தியர்களின் வெற்றிடத்திற்கு நிரந்தர வைத்தியர் களை உடனடியாக நியமிக்கக் கோரி மாபெரும் ஆர்ப்பாட் டமொன்று எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசா லையின் முன்பாக இடம் பெற வுள்ளது.

60 வைத்தியர்கள் பணி யாற்ற வேண்டிய குறித்த வைத்தியசாலையில் தற்போது 27 வைத்தியர்களே பணியா ற்றுகின்றனர்.

கடந்த பல மாதங்களாக நிலவி வரும் இவ் வைத்தியர் பற்றாக்குறை இதுவரை நிவ ர்த்தி செய்யப்படவில்லை. இவ் விடயம் தொடர்பில் சம்பந்த ப்பட்ட அமைச்சு மற்றும் திணை க்கள அதிகாரிகளுக்கு பல தடவைகள் எடுத்துக்கூறியும் இது வரை எவ்வித நடவடிக் கைகளும் எடுக்கப்படாத நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை பகுதிநேர பணிப்புறக் கணிப்பு முன்னெடுக்கப்பட்டி ருந்தது.

இந்நிலையில் எதிர்வரும் திங்கட்கிழமை முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசா லையின் நோயாளர் நலன் புரிச்சங்கம் மற்றும் வைத்திய சாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியன ஒன்றிணைந்து மாபெரும் போராட்டமொன்றை முன்னெடுக்கவுள் ளன. (4-5-8-281)

# நல்லூர் உற்சவத்தில் சுகாதார நடைமுறைகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பெருந்திருவிழா நடவடிக்கைகளை சுகாதார வழிமுறைகளுடன் மட்டுப்படுத் தப்பட்ட எண்ணிக்கையிலான பக்தர்களுடன் முன்னெடுக்கு மாறு சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் மற்றும் மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆகி யோர் அறிவுறுத்தியுள் ளனர்.

தொற்றுநோய் கட்டுப்பாட்டு விதிமுறைகளை மீறி பக்தர்கள் ஆலய சூழலில் கூடும் சந்தர்ப் பத்தில் தொற்றுநோய் பரவும் அபாயம் ஏற்பட வாய்ப்புள் ளது.

எனவே எதிர்வரும் தின ங்களில் இறுக்கமான சுகாதார கட்டுப்பாடுகள், விதிமுறைகள் என்பவற்றை மீறி, சமூக விலகலை பொருட்படுத்தாமல் செயற்படுபவர்களுக்கெதிராக தனிமைப்படுத்தலும் நோய்த்த டுப்பும் சட்டத்தின் கீழ் நட வடிக்கை எடுக்க வேண்டிய துர திர்ஷ்டநிலை ஏற்படவாய்ப் புள்ளது என்பதுடன் அனை வரையும் சுகாதார நடைமுறை களைப் பின்பற்றி பொறுப் புணர்வுடன் செயற்படுமாறு யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பணி மனையினர் அறிவுறுத்தி யுள்ளனர். (5)

# 12 நாட்களில் 189 பேருக்கு டெங்கு


(கொழும்பு)

கடந்த 12 நாட்களில் மட்டும் இலங்கையில் 189 டெங்கு நோயாளர்கள் இனங் காணப் பட்டுள்ளனர்.

அவர்களில் 62 நோயா ளர்கள் கண்டியைச் சேர்ந்தவர் கள் எனத் தெரிவிக்கப்படு கிறது.

மக்கள் தங்கள் சுற்றுச் சூழலை சுத்தமாகவும் வைத் திருப்பதில் கவனம் செலுத் துமாறு சுகாதாரத்துறை யினர் அறிவுறுத்தியுள்ள னர். (2)

# துப்பாக்கி தயாரித்தவர் கைது



(கொழும்பு)

வலஸ்முல்ல பகுதியில் சட்ட விரோதமாக துப்பாக்கிகளை தயாரித்து வந்த நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வலஸ்முல்ல பொலிஸ் பிரி வுக்குட்பட்ட மெதகன்கொட பகு தியில் நேற்று முன்தினம் புதன் கிழமை பொலிஸ் விசேட அதி ரடிப்படைக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள் ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊட கப்பிரிவு தெரிவித்தது.

கல்கொலஹேன - மெத கன்கொட பகுதியைச் சேர்ந்த 61 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட் டுள்ளார்.

இவரிடமிருந்து உள்நாட்டு துப்பாக்கிகள், தன்னியக்க துப் பாக்கி தோட்டாக்கள், எஸ்.ஜே. ரக தோட்டாக்கள், வெற்றுத் தோட்டாக்கள், துப்பாக்கி தயா ரிப்புக்கு பயன்படுத்தும் பல் வேறு உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை வலஸ்முல்ல பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (2)

# யுவதியிடம் மோட்டார் சைக்கிளை பறித்து பறந்து சென்ற இளைஞன்

## யாழ்.நகரில் பரபரப்பு

(கொடிகாமம்)

யாழில் யுவதியொருவரிட மிருந்து மோட்டார் சைக்கிளை இளைஞர் ஒருவர் பறித்து சென் றதால் பரபரப்பு ஏற்பட்டது. இளை ஞர்கள் அவரை வழிமறித்த போது, குறித்த யுவதிக்கு அந்த மோட்டார் சைக்கிளை தானே வாங்கி கொடுத்ததாக தெரி வித்து அதனை எடுத்துச் சென் றார்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் யாழ்.நகரில் நடை பெற்றது.

குறித்த யுவதி பொருட்களை கொள்வனவு செய்து விட்டு, வெளியில் வந்து மோட்டார் சைக்கிளில் ஏற முற்பட்ட போது இளைஞர் ஒருவர் திறப்பை பறித்து மோட்டார் சைக்கிளை இயக்க முற்பட்டார்.

குறித்த இளைஞருடன் அந்த யுவதி தர்க்கத்தில் ஈடு பட்டார். இதன்போது யுவதி கூச்சலிட்டதையடுத்து, அங்கி ருந்த இளைஞர்கள் சிலர் இளைஞனை வழிமறித்தனர்.

அந்த மோட்டார் சைக்கிளை யுவதிக்கு தானே கொள்வனவு செய்து கொடுத்ததாக குறிப்பிட்டு, அதற்கான பற்றுச்சீட்டுக்களை காண்பித்துள்ளார். யுவதியுட னான காதல் உறவை பேணிய போது மோட்டார் சைக்கிளை வாங்கிக் கொடுத்ததாகவும் சில மாதத்தில் தன்னுடைய உறவை அவர் துண்டித்து விட்டதாகவும் மோட்டார் சைக்கிளை ஒப்ப டைக்கும்படி தகவல் அனுப் பியும் யுவதி அதை திருப்பித் தராததால் பறித்ததாகவும் தெரி வித்தார்.

இந்தச் சர்ச்சையை பொலிஸ் நிலையத்தில் தீர்த்துக் கொள் ளும்படி அங்கிருந்தவர்கள் இளைஞனுக்கு ஆலோசனை தெரிவித்தனர்.

எனினும் சர்ச்சையை தொடர விரும்பாத யுவதி, ஆட்டோ ஒன்றை மறித்து, அதில் ஏறி சென்று விட்டார். இதனால் சிறிது நேரம் அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற் பட்டது. (4-5-8-114)

# இராசிபலன்

14.08.2020
ஆடி 30, வெள்ளிக்கிழமை
தசமி முற்பகல் 11.40 மணிவரை
மிருகசீரிடம் பின்னிரவு 5.18 மணிவரை
சுபநேரம் 6.05-7.35 மணிவரை
இராகுகாலம் 10.35-12.05 மணிவரை
சந்திராஷ்டமம்-அனுசம்

வளவன்

**மேஷம்** — எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாகச் செயற்படுவீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**ரிஷபம்** — குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், வழிபாட்டால் குதூகலம் காணவேண்டிய நாள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு.

**மிதுனம்** — நண்பர்கள் தொடர்பான சில வேலைகளுக்காக அலைய நேரிடலாம், வழிபாட்டால் திருப்தி காணவேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை.

**கடகம்** — உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், வருமானம் பெருகி வளம் காணும் நாள், அரசு வழியில் அனுகூலமுண்டு, காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்** — முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு.

**கன்னி** — பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் நாள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**துலாம்** — பொதுவாழ்வில் வீண்பழிகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**விருச்சிகம்** — வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் கிடைக்கும்.

**தனுசு** — ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவார்கள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**மகரம்** — கல்யாணக் கனவுகள் நனவாகலாம், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும்.

**கும்பம்** — தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கும், எடுத்த காரியங்கள் எளிதில் நடைபெறும் நாள், ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும்.

**மீனம்** — மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உடன் பிறப்புக்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

உன் கவலைகளையெல்லாம் தாங்கும் சுமைதாங்கிதான் கடவுள்

# தேர்தலுக்கான நடவடிக்கைகள் ஆரம்பித்தது முதல் கொரோனா வைரஸ் ஆபத்து அதிகமாக உள்ளது

## தொற்று நோயியல் பிரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

**பொதுத் தேர்தலுக்கான நடவடிக்கைகள் ஆரம்பித்தது முதல் தற்போது வரை நாடு மிக சுறுசுறுப்பாகச் செயற்படுவதால் சமூகத்தில் கொரோனா நோயாளி ஒருவர் அடையாளம் காணப்பட்டால்கூட கொரோனா பரவுவதற்கான ஆபத்து அதிகளவில் காணப்படுவதாக தொற்றுநோயியல் பிரிவு எச்சரித்துள்ளது.**



தனது அலுவலகத்திலிருந்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அந்தப் பிரிவின் தலைவர் வைத்தியர் சுதாத் சமரவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் பாடசாலை ஆரம்பித்தல் மற்றும் புதிய அமைச்சர்கள் கடமைகளை ஆரம்பித்தல் போன்ற செயற்பாடுகளால் மக்களின் நடமாட்டம் அதிகரித்தமையே இதற்கு காரணம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தச் சூழ்நிலையில் சமூகத்தில் கொரோனா நோயாளி எவரும் அடையாளம் காணப்படாவிட்டாலும், நோய்த்தொற்று பரவும் அபாயம் அதிகமாகவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, மக்கள்வைரஸிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ளச் சுகாதார வழிகாட்டல்களைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஜ-4)


## வீடு விற்பனைக்கு

முல்லைத்தீவு கரைச்சி குடியிருப்பில் சகல வசதிகளுடன் கூடிய வீட்டுடன் 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
விஜி :- 0112723372
நிவேதா :- 0774066508
(C-039)


# கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 17 . 11 . 1952



விண்ணில் 11 . 08 . 2020

## அமரர். நாகலட்சுமி வாமதாசன்

நயினாதீவு 3 ஆம் வட்டாரத்தினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **திருமதி நாகலட்சுமி வாமதாசன்** அவர்கள் கடந்த 11.08.2020 காலமான செய்தியறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!!**

(C-041)

E.S.P. நாகரத்தினம்,
கஜமுகன் ஹாட்வெயர்,
No: 147, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



நல்லூர் கந்த சுவாமி ஆலய மஹோற்சவத்தில் நேற்று கார்த்திகை திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில், ஸ்வர்ண.மயூர வாகனத்தில் முருகப்பெருமானும் தனித்தனி அன்ன வாகனங்களில் தேவியரும் எழுந்தருளினர். (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# கடமைகளை பொறுப்பேற்றார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



(யாழ்ப்பாணம்)

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று வியாழக்கிழமை தனது கடமைகளை உத்தியோகபூர்வமாகப்பொறுப்பேற்றுக்கொண்டார்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் கீழ் நடைபெற்ற 9 ஆவது நாடாளுன்றத் தேர்தலில் பெருவாரியான வெற்றி பெற்ற பொதுஜன பெரமுன, ஈ.பி.டி.பி போன்ற பங்காளிக் கட்சிகளுடன் இணைந்து தேசிய அரசாங்கத்தினை அமைத்துள்ளது.

அதனடிப்படையில், நேற்று முன்தினம் தலதா மாளிகையில் ஏற்பாடு செய்யப்பட்ட பதவியேற்பு நிகழ்வில் அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களுக்கான நியமனங்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கி வைத்தார்.

இந்நிலையில் கடற்றொழில் அமைச்சராக பதவியேற்றுக் கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று மாளிகாவத்தையில் அமைந்துள்ள அமைச்சு அலுவலகத்தில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-8)

# 9 வர்த்தக நிலையங்களுக்கு பிரதேச சபையால் சீல் வைப்பு

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட 9 வர்த்தக நிலையங்கள் பிரதேச சபையினால் சீல் வைக்கப்பட்டது.

பிரதேச சபையின் சட்ட திட்டங்களுக்கு அமைய வர்த்தக நிலையங்களை உரிமையாளர்கள் நடத்தாமல் வேறு நபர்களுக்கு கைமாறியதால் நெல்லியடி புதிய சந்தை பகுதியில் அமைந்துள்ள 8 கடைகள் நேற்று முன்தினமும் ஒரு கடை நேற்றும் சீல் வைக்கப்பட்டது.

இவ்வாறு சீல் வைக்கப்பட்ட 9 கடைகளில் 5 கடைகள் வெளி மாவட்ட வியாபாரிகளால் உப வாடகைக்கு நடத்தப்பட்டு வந்தவையாகும்.

பிரதேச சபையிடம் கடைகளை குத்தகைக்கு பெற்ற உள்ளூர் வர்த்தகர்கள், அவற்றை வெளி மாவட்டங்களைச் சேர்ந்த வர்த்தகர்களிற்கும் குத்தகைக்கு வழங்கியிருந்தனர்.

இது பிரதேசசபை சட்ட விதிகளிற்கு முரணானது. இந்நிலையில் கரவெட்டி பிரதேச சபை தவிசாளரினால் நெல்லியடி புதிய சந்தை வர்த்தக நிலையங்கள் ஆய்வு செய்யப்பட்டு இவ்வாறான 8 கடைகளிற்கு சீல் வைக்கப்பட்டன.

அத்துடன், விதிகளிற்கு முரணாக இயங்கிய உள்ளூர் வர்த்தகர் ஒருவருடைய கடையும் சீல் வைக்கப்பட்டது. (4-5-8-60)



# வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ரவீந்திரனுக்கு மணிவிழா

(கரணவாய்)

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரனின் மணிவிழா நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பருத்தித்துறை சூரியமஹால் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண முன்னாள் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வரவேற்புரையை பேராசிரியர் மா.நடராஜசுந்தரம், வழங்குவதுடன் ஆசியுரைகளை நெல்லண்டை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ தியாகராஜ குருக்கள் சோமஸ்கந்தராஜ குருக்கள் மற்றும் பருத்தித்துறை பங்குத்தந்தை அ.பெ. பெனற் அடிகளார் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

கரவெட்டி கோட்டக்கல்விப் பணிப்பாளர் கொ.யோகநாதன் மணிவிழா நாயகனுக்கான வாழ்த்துப்பா வழங்கவுள்ளார்.

வாழ்த்துரைகளை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார், வடமராட்சி கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப்பணிப்பாளர் இ.தமிழ்மாறன், வல்வை. மகளிர் கல்லூரி அதிபர் செல்வி இ.சுப்பிரமணிய குருக்கள், பருத்தித்துறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் மா.நவநீதமணி, யாழ்ப்பாண கல்வி வலய முன்னாள் பிரதிக் கல்விப்பணிப்பாளர் த.அருனகிரிராஜா, வடக்கு மாகாண ஒய்வுநிலை கல்விப் பணிப்பாளர் ஆ.இராசேந்திரன், வடமராட்சி கல்வி வலய முன்னாள் கல்விப்பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம், யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர், சி.சிறிசற்குணராசா, யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ் கண்ணன், வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ்.சுந்தரசிவம் மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்த்தவுள்ளனர். (4-5)

# ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

புத்தசாசனம், கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சு, இலங்கை கலைக்கழகம், அரச நாடக ஆலோசனைக்குழு மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியன ஒன்றிணைந்து நடத்தும் அரச சிறுவர் நாடக விழா, குறு நாடகம், நெடும் நாடகம் ஆகியவற்றுக்கான போட்டிகள் நடைபெறவுள்ளன. எனவே இப்போட்டியில் கலை நிறுவனங்கள், பாடசாலைகள், உயர்கல்வி நிறுவனங்கள் (பல்கலைக்கழகம்) மற்றும் ஆர்வமுடைய கலைஞர்கள் பங்கு கொள்ள முடியும்.

எனவே இதில் பங்குகொள்ள விரும்புபவர்கள் நல்லூர் பிரதேச செயலக கலாசாரப்பிரிவில் விண்ணப்பப்படிவம் மற்றும் சுற்று நிருபங்களைப் பெற்று எதிர்வரும் 25.09.2020 ஆம் திகதிக்கு முன்னர் ஆக்கங்களை சமர்ப்பிக்குமாறு நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி எ.அன்ரன் யோக நாயகம் அறிவித்துள்ளார். (5)

# காப்பெற் வீதிகளாக மாறுகிறது கொழும்புத்துறை கரையோர வீதிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் உள்ள கரையோர வீதிகளை காப்பெற் வீதிகளாக்கும் திட்டத்தில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் முதற்கட்டமாக சில காப்பெற் வீதிகள் அமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் கொழும்புத்துறை விபுலானந்தா வீதி, சுவாமியார் வீதி மற்றும் கொய்யாத்தோட்டம், புதுவீதி ஆகியன காப்பெற் வீதிகளாக அமைக்கப்படவுள்ளன.

சில மாதங்களுக்கு முன்னர் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் அப்பகுதி மக்கள் மற்றும் கடற்றொழிலாளர்கள் விடுத்திருந்த கோரிக்கைக்கு அமைவாக கடற்றொழில் அமைச்சினால் குறித்த வீதிகளைக் காப்பெற் வீதிகளாக மாற்றி அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

ஆனாலும் நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்றமையால் அவ்வீதிகளின் புனரமைப்பு பணிகள்சற்று தாமதமடைந்தன.

இந்நிலையில் தற்போது அவ்வீதிகளை காப்பெற் வீதிகளாக புனரமைப்புச் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-8)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: சூரி,செவ் 2 ல்உயரம்: 5'6"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. இந்தியாவில் தனியார் நிறுவனம் நடத்துகின்றார்.
எதிர்பார்ப்பு: படித்த அழகான பெண்
தொ.இ: B/11099

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: பூசம் 3
கி.பா: 31 செவ் 12 இல்
உயரம்:5'8"
தகைமை/தொழில்: Diploma in Library science. Librarian class-I (Gov)
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/7280

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பரணி 1
கி.பா: செவ் 3 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்.
எதிர்பார்ப்பு: பட்டதாரி.அரச உத்தியோகம் உள்ள பெண்.
தொ.இ: B/7283

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 54 சூரி,செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. அரச அலுவலகப் பணியாளர்.
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/7286

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 3
கி.பா: 14 ½ செவ் 9 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: பட்டதாரி. அபிவிருத்தி உத்தியோகத்தர்.
எதிர்பார்ப்பு: பட்டதாரி. அரச உத்தியோகத்தர்
தொ.இ: G/8749

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 3
கி.பா: 49 ¼ சூரி, செவ் 7 இல்
உயரம்: 5"
தகைமை/தொழில்: Bachelors degree. Accountant.
எதிர்பார்ப்பு: பட்டதாரி மணமகன். வெளிநாடு மட்டும்.
தொ.இ: G/8751

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பரணி 4
கி.பா: 31 செவ் 5 ல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: MBA. B.E. Software (Privte)
எதிர்பார்ப்பு: தகுந்த வரன். வெளிநாட்டவர் மட்டும்
தொ.இ: G/8757

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: செவ் 2 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: பட்டதாரி. பல்கலைக்கழக விரிவுரையாளர்.
எதிர்பார்ப்பு:.பட்டதாரி. அரச உத்தியோகத்தர்
தொ.இ: G/8758

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**



# ராஜ் ஜுவல்லர்ஸ்

**அடகு பிடிப்பவர்கள்**



Best Choice

**78000/-**



## 1 பவுண் – 22 கரட்டிற்கு

(3562)

**முக்கிய அறிவித்தல்**

2018.11.01 ஆம் திகதி தொடக்கம் 2019.09.30ஆம் திகதி வரை (பற்றுச்சீட்டு இலக்கம் 21000-38000 வரையான) வைக்கப்பட்ட அடகுகளை 2020.09.30 இற்குள் மீட்டுக் கொள்ளவும்.அல்லது தற்போதைய தங்கத்தின் அதிகரித்த பெறுமதிக்கு ஏற்ப வட்டியுடன் சேர்த்து புதுப்பித்துக் கொள்ளலாம். தவறின் 2020.09.30 இற்கு பின் விற்பனை செய்யப்பட்டு விடும். அதன் பின் எக்காரணம் கொண்டும் மீட்க முடியாது.

**இல.31C. ஆடியபாதம் வீதி. திருநெல்வேலி (சந்தைக்கு அருகில்)**
**Tel: 0212217287, 0766361238**



# மணிவிழா நாயகனை மனமகிழ்ந்து மனதார வாழ்த்துகின்றோம்

## திரு.யோகசாமி ரவீந்திரன்

**(வலயக் கல்விப்பணிப்பாளர், வடமராட்சி கல்வி வலயம்)**



யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் 1999.01.04 முதல் 2013.01.20 வரை பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் ( கல்வி அபிவிருத்தி, கல்வி நிர்வாகம்) கடமையாற்றி இன்று வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்து மணிவிழாக் காணும் **திரு.யோகசாமி ரவீந்திரன்** அவர்கள் தம் குடும்பத்தினருடன் சீரும் சிறப்புமாக வாழ அகவை நாளில் மனமகிழ்ந்து மனதார வாழ்த்துகின்றோம்.

(C-032)

**வாழ்த்துவோர்: அவருடன் பணியாற்றிய யாழ்ப்பாணம் கல்வி வலய நண்பர்கள்.**



# மணிவிழா வாழ்த்து



மண்ணில் மாண்புறு பணிகள் செய்து
மணிவிழா காணும் அன்பரே
கண்ணில் நாம் காணும்
கடமைக்கு பேர் பெற்ற பண்பரே

## திரு.யோகசாமி ரவீந்திரன்

**(வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி.)**
**14.08.2020**

ஓயாத பணிகளால் சீர் பெற்றீர்
ஒரு நாளும் தளர்வறியா மனம் பெற்றீர்
தேயாத கொள்கையினால் துளிர்த்தீர்
தேன் தமிழும் குளிர்ந்து விட வளர்ந்தீர்

மனத்திலே இளமை மாறாத இனிமை
மங்காத பணிகள் மறையாத பெருமை
இனத்திலே பற்று இழையோடும் மனிதம்
இவையாவும் சேர்ந்த பேருருவம் நீரே

கனக்கின்ற பணிகளிடை எம்மூர்க்கும் உழைத்தீர்
கவினான ஊரோடு கலந்து நீர் நின்றீர்
நினைக்கின்ற மனத்தோடு நிறைந்து நிற்பீர்
நின் மணிவிழா வயதில் வாழ்த்துகின்றோம்



best wishes

(3569)

**வாழ்த்துவோர்: கலைமகள் சனசமூக நிலையம், வல்லை வீதி, தொண்டைமானாறு.**

# ஒற்றையாட்சி அரசியலமைப்பு எனும் சதியை சகதியில் எறிய தமிழ் மக்கள் ஒன்றிணைய வேண்டும்

## கஜேந்திரகுமார் முழக்கம்



(நெளுக்குளம்)

**எமது உரிமைகளை அனுபவிக்கக்கூடிய வகையிலே தமிழ்த்தேசத்தின் அங்கீகாரம் பெற்ற ஒரு அரசியல் தீர்வை நோக்கி பயணிப்போம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

வவுனியா கனகராயன் குளம் பகுதிக்கு கடந்த செவ்வாய்க்கிழமை விஜயம் செய்த அவர் அங்கு இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தாயக நிலப்பரப்பிலே பல மாவட்டங்கள் பறிபோய் கொண்டிருக்கின்றன. வன்னி மாவட்டத்தையும் அந்தநிலைக்கு கொண்டு செல்கின்றார்கள். எனவே இந்தத் தேர்தலுக்கு பின்னர் வரக்கூடிய நிலைமை தொடர்பாக நாம் ஆராய வேண்டும்.

இன்று புதிய அரசியலமைப்பொன்று உருவாக்கப்படவிருக்கின்றது.

அது ஒரு ஒற்றையாட்சியாக இருக்கப் போகின்றது. அதனை ஆதரிக்கப் போவதாக கூட்டமைப்பு ஏற்கனவே அறிவித்திருக்கிறது.

இது தமிழ்மக்கள் தாங்களாகவே விரும்பி ஒற்றையாட்சி அரசியலமைப்பை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பதாக உலகிற்கு காட்ட முனைகிறது. இச் செய்தியை நாம் முறியடிக்க வேண்டும்.

அந்தப் புதிய அரசியலமைப்பானது சர்வஜன வாக்கெடுப்பிற்கு விடப்பட்டால் வடகிழக்கு தமிழ்மக்கள் ஒன்றிணைந்து ஏகோபித்த எதிர்ப்பை நிலை நாட்டியே ஆக வேண்டும்.

எனவே ஒற்றையாட்சி அரசியலமைப்பு என்ற சதியை முறியடிப்பதற்கு மக்களை அணிதிரட்டி கட்டமைக்கும் பணிகளை நாம் மேற்கொள்ளவுள்ளோம்.

யாழில் மாத்திரமின்றி ஏனைய மாவட்டங்களிலும் அதனை முன்னெடுப்பதற்காக எமது கட்சியை சேர்ந்த கஜேந்திரனுக்கு தேசியப் பட்டியல் ஆசனத்தை வழங்கியிருந்தோம்.

ஒற்றையாட்சியை முறியடிப்பதற்கு யாழைத்தவிர ஏனைய மாவட்டங்களிலும் எமது பங்களிப்பு நிச்சயமாக இருக்கும். இந்த இனத்தின் உரிமைகளை தொடர்ந்தும் உயிருடன் வைத்திருப்பதுடன் எமது உரிமைகளை அனுபவிக்கக்கூடிய வகையிலே தமிழ்த்தேசத்தின் அங்கீகாரம் பெற்ற ஒரு அரசியல் தீர்வை நோக்கி நாம் பயணிப்போம். உங்களுடைய உழைப்பும் முயற்சியும் வீண் போகாது.

காணாமல் போனவர்கள் தொடர்பாகவும் இன அழிப்பிற்கு நீதிகோரியும் இறுக்கமான செயற்பாடுகளை நாம் முன்னெடுப்போம். பெரும்பான்மை கிடைத்துள்ள புதிய அரசாங்கம் எங்களை திரும்பியே பார்க்க வேண்டிய தேவை இல்லை. எந்தத் தரப்பின் ஆதரவும் அவர்களுக்குத் தேவையில்லை.

எனவே பொறுப்புக்கூறல் என்ற விடயத்தை இறுக்கமாக முன்னெடுப்பதன் ஊடாக மாத்திரமே அவர்கள் எங்களை திரும்பி பார்க்கும் நிலைமை உருவாகும் என மேலும் தெரிவித்தார். (4-5-299)

# சிவன் ஆலய மஹாகும்பாபிஷேக நிகழ்வு ஏற்பாடு பற்றிய கலந்துரையாடல்

(நெளுக்குளம்)



வவுனியா கோவில்குளம் சிவன் ஆலயத்தில் இம் மாதம் 24 ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள மஹா கும்பாபிஷேகத்திற்கான ஏற்பாடுகள் பற்றிய கலந்துரையாடல் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சமன் பந்துலசேன தலைமையில் மாவட்ட அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. சுகாதார நடைமுறைகளுடன் இடம்பெறவுள்ள மஹா கும்பாபிஷேக நிகழ்வுகளின் ஏற்பாடுகள் குறித்தும், நடைமுறைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டுள்ளதுடன் அதற்கான ஆயத்த முன் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பொறுப்புக்களையும் உரிய தரப்புக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு ஏற்பாடுகள், போக்குவரத்து மற்றும் சுகாதார நடைமுறைகள் உள்ளிட்ட விடயங்கள் ஆராயப்பட்டன.

வவுனியா சிவன் ஆலயத்தில் 12 வருடங்களுக்கு ஒருமுறை இடம்பெறவுள்ள மஹா கும்பாபிஷேக நிகழ்வு 3 வது தடவையாக இவ்வருடம் இடம் பெறவுள் ளது.

குறித்த கலந்துரையாடலின் போது மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர், வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, சுகாதார உத்தியோகத்தர்கள், மாவட்ட கலாசார அலுவலகர், உதவி பிரதேச செயலாளர், மின்சார சபை அதிகாரி, போக்குவரத்துப் பொலிஸ் பொறுப்பதிகாரி, ஆலய நிர்வாக தலைவர், செயலாளர், உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (4,5,8,299)

## மஹோற்சவம் ஆரம்பம்

(குப்பிழான்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று வியாழக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்தும் பத்து தினங்கள் இடம்பெறவுள்ள இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் தேர்த் திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (5-18)

## தும்பளையில் வெளிமாவட்ட மீனவர்களின் வாடிகள் தீக்கிரை



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை- தும்பளை கடற்கரை பகுதியில் வெளி மாவட்ட மீனவர்களின் வாடிகள் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் தீ வைத்துக் கொழுத்தப்பட்டன. கடலட்டை தொழிலுக்காக தும்பளை கடற்கரையில் வாடியமைத்து தங்கியிருந்த வெளிமாவட்ட மீனவர்களுக்கு சொந்தமான 5 வாடிகள் இவ்வாறு இனந்தெரியாத நபர்களால் தீயிட்டு கொழுத்தப்பட்டுள்ளன.

சம்பவத்தில் வாடிகள் முற்றாக எரிந்துள்ள நிலையில், பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(4-5-8-60)

# மன்னாரில் சிக்கிய ரஷ்ய பிரஜைக்கு கொரோனாத் தொற்று இல்லை

(மன்னார்)

தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் காலாவதியான விசாவுடன் சட்ட விரோதமாக தங்கியிருந்த ரஷ்ய நாட்டுப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார்.


குறித்த ரஷ்யப் பிரஜைக்கு கொரோனாத் தொற்று தொடர்பான பி.சி.ஆர். பரிசோதனை இடம்பெற்று நேற்று வியாழக்கிழமை குறித்த அறிக்கையானது மன்னார் நீதவான் மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த அறிக்கையின் பிரகாரம் ரஷ்ய நாட்டுப் பிரஜைக்கு கொரோனா தொற்று இல்லை எனத்தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து ரஷ்ய நாட்டுப்பிரஜை சார்பாக முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி எஸ்.டினேசனினால் மிரிஹான ஊடாக குறித்த நபரை ரஷ்யாவிற்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மன்றில் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. கோரிக்கையை ஏற்று குறித்த ரஷ்ய நாட்டுப் பிரஜையைச் சொந்த நாடான ரஷ்யாவிற்கு மிரிஹான ஊடாக அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நீதிமன்றத்தினால் உத்தரவிடப்பட்டுள்ளது. (5-8-285)

# திருகோணமலை கடற்படைத்தளம்

# சித்திரவதைகளுக்கானதல்ல; புலனாய்விற்கானதே

## படைமுகாம் தளபதி சாட்சியம்



(திருமலை)

**திருகோணமலை கடற்படைத் தளத்தில் உள்ள கன்சைட் என்ற இடம் சித்திரவதைகளுக்காக பயன்படுத்தப்படவில்லை என அந்த முகாமின் தளபதி சுமித் ரணசிங்க தெரிவித்துள்ளார்.**

அத்தோடு குறித்த இடம் புலனாய்வு நடவடிக்கைகளுக்காகவே பயன்படுத்தப்பட்டது என அந்த முகாமின் தளபதி சுமித் ரணசிங்க தெரிவித்தார்.

அரசியல் பழிவாங்கல்கள் குறித்த ஜனாதிபதி ஆணைக் குழுவின் முன்பாக சாட்சியமளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை கடற்படைத் தளத்தில் உள்ள கன்சைட் பகுதியை நல்லாட்சி அரசாங்கத்தில் கோட்டா முகாம் என அழைத்தனர்.

குறிப்பிட்ட பகுதியில் 700 விடுதலைப்புலிகள் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர் என நல்லாட்சி அரசாங்கத்தில் தெரிவிக்கப்பட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சி.ஐ.டியின் முன்னாள் உத்தியோகத்தர் நிசாந்த சில்வா மற்றும் சானி அபயசேகர ஆகியோர் இதை கோட்டா முகாம் என கூறியிருந்ததாகவும் அந்த அதிகாரி சாட்சியம் வழங்கிய போது தெரிவித்தார். (2)

# ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியலில் தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு இடமில்லை



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் உறுப்பினர்கள் தொடர்பாக இறுதி முடிவு எட்டப்பட்டுள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

அதன்படி, ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் உறுப்பினர்களாக ரஞ்சித் மத்தும பண்டார, இம்தியாஸ் பகீர் மர்கார், திஸ்ஸ அத்தநாயக்க, ஹரீன் பெர்னாண்டோ, மயந்த திசாநாயக்க, எரான் விக்ரமரத்ன, டயனா கமகே ஆகியோரின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஒன்பதாவது நாடாளுமன்றத்துக்காக தேசியப் பட்டியலில் ஏழு ஆசனங்களை ஐக்கிய மக்கள் சக்தி பெற்றது.

இதில் 4 ஆசனங்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் பெரும்பான்மை உறுப்பினர்களுக்கும் ஏனைய 3 ஆசனங்களை தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய சிறுபான்மை கட்சிகளுக்கு வழங்குமாறு ஏற்கனவே ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் தாம் கோரியிருந்ததாகவும் அதற்கு அவர் இணங்கியதாகவும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் ஊடகமொன்றிக்கு தெரிவித்திருந்தார்.

அத்தோடு ஐக்கிய மக்கள் சக்தி உறுதியளித்தபடி தேசிய பட்டியல் நியமனம் தரப்படாவிட்டால் சிறுபான்மை கட்சிகள் நாடாளுமன்றத்தில் தனிக் குழுவாக அமர வேண்டிய நிலை ஏற்படுமெனவும் மனோ கணேசன் இதன்போது எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இவ்வாறான நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் உறுப்பினர்களில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் உறுப்பினரின் பெயர் உள்வாங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# நாடு திரும்பவுள்ள இலங்கையர்கள்

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 50 ஆயிரம் இலங்கையர்கள் எதிர்வரும் நாட்களில் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படவுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 93 நாடுகளிலிருந்து இதுவரை 19 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கையைச் சேர்ந்த புலம்பெயர் தொழிலாளர்கள் நாட்டிற்கு திரும்பியுள்ளதாக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் அட்மிரல் கொலம்பேஜ் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை கொரோனாத் தொற்றினால் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி காரணமாக மேலும் 50 ஆயிரம் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் இலங்கைக்கு திரும்புவதற்கு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களுள் பலர் தொழில் வாய்ப்பினை இழந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் தொடர்ந்தும் முன்னெடுக்கும் என்றும் அவர் உறுதிப்படுத்தினார். (2)

# 2 கோடி பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளுடன் இருவர் கைது

(கொழும்பு)

இரண்டு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட இருவர் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் முன்னெடுத்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது பிலியந்தலை பகுதியில் வைத்து குறித்த சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளதாக மேல்மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் இருந்து சுமார் இரண்டு கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய 2 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பிலியந்தலை பெலன்வத்தை பகுதியைச் சேர்ந்த தம்பதியரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (2)




**இலங்கை வங்கியின் 81 ஆவது ஆண்டு விழா இலங்கை வங்கி திருநெல்வேலி கிளையில் அண்மையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. வங்கி முகாமையாளர் வி.விஜயகுமார் தலைமையில் சமயப் பெரியோர்களின் ஆசீர்வாதத்துடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் வாடிக்கையாளர்கள் பலரும் முன்னாள் வங்கியாளர்களும் கலந்துகொண்டனர். 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான கௌரவிப்பும் இதன் போது இடம்பெற்றது.**

# சிங்கப்பூரின் சுதந்திரத்திற்குப் பின் தொடர்ந்து இடைவிடாமல் ஆட்சியில் இருந்து வரும் லீயின் மக்கள் செயல் கட்சி - ஒரு பார்வை

01

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்-எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



சிங்கப்பூரின் யாப்பின் படி, சிங்கப்பூர் நாடாளுமன்றத்தின் அதிகபட்சக் கால எல்லை 5 ஆண்டுகள் ஆகும். இக்காலப்பகுதிக்குள் குடியரசுத் தலைவர் நாடாளுமன்றத்தைக் கலைத்து, மூன்று மாதத்திற்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும். பிரதமர் அலுவலகத்தின் கீழுள்ள தேர்தல் திணைக்களத்தால் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. சிங்கப்பூரில் வாக்களிப்பது கட்டாயம் ஆகும்.

வாக்களிக்கத் தகுதி பெறும் வயதெல்லை 21 ஆகும். 2020 ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதியில் இத் தீவின் மக்கள் தொகை 5.85 மில்லியன்களாக காணப்பட்டது. சிங்கப்பூரின் நிலப்பரப்பளவு 700 சதுர கிலோமீற்றர் ஆகும். சனத்தொகை அடர்த்தி ஒரு கிலோ மீற்றருக்கு கிட்டத்தட்ட 8358 பேர் ஆகும்.

2020 ஆண்டின் தேர்தல் தொகுதிகள் நிர்ணயத்தின் படி பாராளுமன்றத்திற்கு 93 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள். இது சனத் தொகையின் கிட்டத்தட்ட 62,900 பேருக்கு ஒரு பாராளுமன்ற உறுப்பினராகும்.

இத்தேர்தலுக்கு வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தோர் 2,651,435 பேராவார். இது சிங்கப்பூர் சனத்தொகையின் 45 சதவீதம் ஆகும். சிங்கப்பூர் சனத்தொகையில் தமிழர்கள் குறிப்பிடத்தக்க சிறுபான்மையினராக (கிட்டத்தட்ட 4வீதம்) இருப்பதால், சிங்கப்பூரில் தமிழ் ஒரு அரச அங்கீகாரம் பெற்ற மொழியாக இருக்கின்றது.




சிங்கப்பூரில் 18ஆவது நாடாளுமன்ற தேர்தல் 2020ஆம் ஆண்டு ஜூலை 10 ஆம் திகதி நடைபெற்றது. சிங்கப்பூரின் முதல் பிரதமர் லீ குவான் யூ வின் மறைவிற்குப் பிறகு நடந்த இரண்டாவது தேர்தலும், மக்கள் செயல் கட்சி (PAP) பொதுச் செயலாளர் லீ சியன் லூங்கின் தலைமையிலான நான்காவது தேர்தலுமாகும்.

லீ செய்ன் லூங் ஆட்சிக் காலம் முடிய இன்னும் 10 மாதங்கள் இருக்கும் நிலையில் பிரதமர் லீ செய்ன் லூங் முன்னதாகவே தேர்தலை அறிவித்தார். கொரோனா அச்சுறுத்தலுக்கு இடையே தேர்தல் நடைபெற்ற மிகச் சில நாடுகளில் சிங்கப்பூரும் ஒன்று. கொரோனா காரணமாக, வாக்களிக்கும் நிலையங்களின் எண்ணிக்கை 880இல் இருந்து 1100 ஆக அதிகரிக்கப்பட்டது.

இத் தேர்தலில் மக்கள் செயல் கட்சி (PAP) மொத்தமுள்ள 93 இடங்களில் 83 இடங்களை கைப்பற்றி, மீண்டும் ஆட்சியைப் பிடித்தது. 1965இல் சிங்கப்பூர் சுதந்திரம் அடைந்ததிலிருந்து மக்கள் செயல் கட்சியே (PAP) ஆட்சியில் உள்ளது. இத் தேர்தலில் வாக்களித்தோர் 2,535,565 (95.6வீதம்) பேராவர்.

எதிர்க்கட்சிகள் 10 தொகுதிகளைக் கைப்பற்றியுள்ளன. மக்கள் செயல் கட்சி மீண்டும் ஆட்சியைத் தக்கவைத்தாலும் இத்தேர்தல் ஆளும் மக்கள் செயல் கட்சிக்கு சற்றே பின்னடைவை ஏற்படுத்தி உள்ளதாகவே அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

கடந்த முறை மக்கள் செயல் கட்சி 69.9 வீத வாக்குகளைப் பெற்றிருந்தது. இம்முறை அது 61.24 வீதமாக குறைந்துள்ளது. மொத்தம் 8.7 வீத வாக்குகளை அக்கட்சி இழந்துள்ளதுடன் இரண்டு குழுத் தொகுதிகளையும் எதிர்க்கட்சிகளிடம் பறிகொடுத்துள்ளது. இது வருத்தமளிப்பதாகத் தெரிவித்துள்ளார் பிரதமர் லீ சியன் லூங். கடந்த முறையைவிட இப்போது எதிர்க்கட்சிகளின் எண்ணிக்கை நாடாளுமன்றத்தில் இரட்டிப்பாகி உள்ளது.

தேர்தல் முடிவுகள் வெளியான பின் செய்தியாளர்களைச் சந்தித்த பிரதமர் லீ சியன் லூங் நாட்டு மக்கள் தெளிவான முடிவை எடுத்திருப்பதாகவும், இது நல்ல முடிவு என்றும் தெரிவித்தார். சிங்கப்பூரை தற்போதைய நெருக்கடியிலிருந்து மீட்பதற்கான நடவடிக்கைகளில் தமது தலைமையிலான அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள தர்மன் சண்முகரத்தினம், கா. சண்முகம் உள்ளிட்ட மூத்த அமைச்சர்கள் தொடர்ந்து செயற் படுவார்கள் என்று குறிப்பிட்ட பிரதமர் லீ, இம்முறை இந்திய, மலாய் வாக்காளர்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த சிங்கப்பூர் மக்களும் தேசிய அளவிலான அம்சங்களை மனதிற்கொண்டு, தேசிய அடிப்படையிலேயே வாக்களித்திருப்பதாக சுட்டிக் காட்டினார்.

## சிங்கப்பூரின் தோற்றம்

தற்கால சிங்கப்பூரை 1819ஆம் ஆண்டில் அமைத்தவர் சர் ஸ்டாபோர்டு ராபில்ஸ் என்ற ஆங்கிலேயர் ஆவார். இவர் ஆங்கிலக் கிழக்கிந்திய வணிக நிறுவனத்திற்காகத் தேடிச் சென்று 1819இல் சிங்கப்பூர் தீவைக் களமாக அமைத்தார். அப்பகுதியை ஆண்டுகொண்டிருந்த சுல்தான்களிடமிருந்து உரிமை பெற்றார்.

ஆகையால் உண்மையில் சிங்கப்பூரின் வரலாறு ஏறக்குறைய 190 ஆண்டுகள் மட்டுமே பழைமையுடையது. ராபில்ஸ் சிங்கப்பூருக்கு வந்தபோது மலேயர்கள், சீனர்கள், இந்தியர்கள் (தமிழர்கள் உட்பட) முதலிய எல்லா இனப் பிரிவினர்களையும் சிங்கப்பூரில் சந்தித்தார்.

1819ஆம் ஆண்டளவிலே சிங்கப்பூர் மீன்பிடிப்பவர்களின் ஒரு சிறு கிராமமாக விளங்கியது. அச்சமயத்தில் அக்கிராமத்தில் பெரும்பான்மையாக இருந்தவர்களும் மலேயர்களும், சீனர்களும் ஆவார்கள். 1821இல் சிங்கப்பூரில் வசித்த 4,727 பேரில் 132 பேர்தான் இந்தியர்கள் என்று கூறப்படுகிறது. 1824 ஜனவரியில் இத்தீவின் மொத்த மக்கள் தொகை 10,683.

இம்மொத்த மக்கள் தொகையில் மலேயர்கள் 60 வீதம் விழுக்காடும் (6,431) சீனர்கள் 31 வீதமும் (3,317), இந்தியர்கள் 7 வீதமும் (756) இருந்தனர் என்றும் கூறப்படுகிறது. தீபகற்பக் குடியேற்றப் பகுதிகளில் கரும்புத் தோட்டங்களிலும் மிளகு, தென்னந் தோப்புகளிலும் வேலை செய்வதற்காக வங்காள விரிகுடாவைக் கடந்து 1800 இலிருந்தே தென்னிந்தியர்கள் வரத் தொடங்கினர்.

தமிழர்களும் பிறரும் தாமாகவே இங்கு குடியேற வந்தமை 1857 வரை நீடித்தது. ராபில்ஸ் எடுத்த முயற்சியால் சிங்கப்பூர் ஓர் அழகான பிரதானமான சுங்கமற்ற துறைமுகமாகவும் தென்கிழக்காசியாவின் சிறப்பான வாணிபத்தலமாகவும் மாறியது.

## சுதந்திரத்திற்குப் பின் சிங்கப்பூர்

19ஆம் நூற்றாண்டின் தொடக்கங்களில், சிங்கப்பூர் பிரிட்டிஷ் கட்டுப்பாட்டில் இயங்கிவந்தது. மற்ற பிரிட்டிஷ் காலனிகளைப் போலவே சிங்கப்பூரும் ஓரளவு வளர்ச்சி கண்டது. இருப்பினும் சொல்லிக் கொள்ளும்படியான உட்கட்டமைப்பு வசதிகள் அந்தக் காலகட்டத்தில் இல்லை. இங்கிலாந்து ஆதிக்கத்தின் பிடியில் இருந்து மலேசியா வெளியேறிய போது சிங்கப்பூரும் அந்நாட்டுடன் இணைந்திருந்தது. எனினும் சிங்கப்பூர் மாநில அரசுக்கும், மலேசிய மத்திய அரசுக்கும் பல பிரச்சினைகளில் உடன்பாடு ஏற்படவில்லை.

1964இல் பெரும் இனக் கலவரம் ஒன்றும் உருப்பெற்றதை ஒட்டி மலேசிய நாடாளுமன்றம் சிங்கப்பூரை கூட்டமைப்பிலிருந்து விலக்குவது என முடிவெடுத்தது. அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடனும் இம்முடிவு எடுக்கப்பட்டது. உலக வரலாற்றில் இப்படி கட்டாயமாக விடுதலை அளிக்கப்பட்ட நாடாக சிங்கப்பூர் அமைந்தது. ஒரு கடினமான காலகட்டத்தில் துணிந்து முடிவெடுத்து 1965இல் சிங்கப்பூர் என்னும் ஒரு தனி நாட்டை உருவாக்கினார் லீ குவான் யூ.

## யார் இந்த லீ குவான் யூ?



அவரின் வாழ்க்கை வரலாற்றில் தான் நான்காவது தலைமுறை சிங்கப்பூர்க்காரர் என்று குறிப்பிட்டுள்ளார். அவரின் மூதாதையார் லீ போக் பூன், 1846ஆம் ஆண்டு சீனாவில் உள்ள குவாங்தொங் மாகாணத்தில் இருந்து வெளியேறி சிங்கப்பூரின் நீரிணைக் குடியேற்றத்துக்கு (Strait settle ments) 1863இல் வந்ததாக கூறி உள்ளார்.

லீ குவான் யூவின் தாத்தா லீ ஹூட் லாங் 1871இல் சிங்கப்பூரில் பிறந்தவராவார். லீ குவான் யூ வழக்கறிஞர் படிப்பை முடித்தவர்.

இங்கிலாந்து உலகப்போருக்குப் பின்னர் மீண்டும் இங்கிலாந்து சிங்கப்பூரைப் பிடித்துக்கொண்டது. அந்நேரத்தில் லீ குவான் யூ மக்கள் செயல் கட்சியை (PAP) தோழர்களோடு இணைந்து ஆரம்பித்தார்.

படைப்பாற்றல் கொண்ட சிறுபான்மையினரே நாட்டை மாற்றியமைப்பார்கள் என்கிற சிந்தனை ஆழமாக லீ குவான் யூவுக்குள் வேர்விட்டிருந்தது.

முதல் முதலாகப் பிரிட்டன் கட்டுப்பாட்டில் இருக்கும் பொழுது நடந்த தேர்தலில் அவரின் கட்சி ஒப்புக்கு போட்டியிட்டு நான்கு தொகுதிகளை வென்றது. மலேசியாவின் பிரதமர் எங்களோடு நீங்கள் இணையுங்கள் என்று அழைத்தார்.

(தொடரும்...)

# பொலிஸ் பிரிவுகளிடையே உள்ள போட்டியே சஹ்ரானை கைது செய்ய முடியாமைக்குக் காரணம்

## புலனாய்வுப் பிரிவின் பதில் பொறுப்பாளர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**பொலிஸ் துறையின் ஒவ்வொரு பிரிவுகளுக்கும் இடையில் காணப்பட்ட போட்டித் தன்மையே, உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரியான சஹ்ரான் ஹாசிமை கைது செய்ய முடியாமல் போனமைக்கான பிரதான காரணம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் முன்னிலையான, பயங்கரவாத புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த, தீவிரவாத மற்றும் அடிப்படைவாத புலனாய்வு பிரிவின் பதில் பொறுப்பதிகாரி இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பொலிஸ் துறையின் ஒவ்வொரு பிரிவுகளுக்கும் இடையில் நிலவிய ஒற்றுமையின்மையும் இதற்கு ஒரு காரணமாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த 2018 ஆம் ஆண்டு ஜூலை 2 ஆம் திகதி, சஹ்ரான் ஹாசிமை கைது செய்வதற்கான பிடியாணையை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் தான் பெற்றுக் கொண்டதாக, அவர் ஆணைக் குழுவில் தெரிவித்துள்ளார்.

எனினும், சஹ்ரான் ஹாசிமைத் தேடி தான் அவரது மனைவியின் வீட்டுக்கு சென்றிருந்த சந்தர்ப்பத்தில் குற்றப் புலனாய்வுப் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரிடம் இருந்து தனக்கு அழைப்பு கிடைக்கப் பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குறித்த அழைப்பில், இது தொடர்பில் தமது பிரிவினால் ஏற்கனவே விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் புதிய விசாரணைகளின் மூலம் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளுக்குத் தடைப்பு ஏற்படக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

ஆகவே, அங்கிருந்து உடனடியாக வெளியேறுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவின் குறித்த உப பொலிஸ் பரிசோதகரினால் தனக்கு அறிவுறுத்தப்பட்டதாக அவர் தெரிவித்ததுடன் அடுத்து தனது உயரதிகாரிகளுக்கு இது குறித்து அறிவித்த பின்னர் தான் அங்கிருந்து வெளியேறியதாக பயங்கரவாத புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த தீவிரவாத மற்றும் அடிப்படைவாத புலனாய்வு பிரிவின் பதில் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

எனினும், சஹ்ரான் ஹாசிமைத் தேடி தான் அவரது மனைவியின் வீட்டுக்குச் சென்றிருந்த சந்தர்ப்பத்தில், சஹ்ரான் ஹாசிமோ அல்லது அவரது மனைவியோ அங்கு இருக்கவில்லை.

இந்த நிலையில், பொலிஸ் துறையின் ஒவ்வொரு பிரிவுகளுக்கும் இடையில் காணப்பட்ட இவ்வாறான போட்டித் தன்மைகளே, உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரியான சஹ்ரான்ஹாசிமை கைது செய்ய முடியாமல் போனமைக்கான பிரதான காரணம் என அவர் ஆணைக்குழுவுக்கு சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது. (2)

# மரணச்சான்றிதழையும் இழப்பீட்டையும் வழங்குபவர்கள் நீதி வழங்குவதென்பது சாத்தியப்படாத ஒன்றாகும்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

(கொழும்பு)

புதிதாக ஏற்பட்டிருக்கின்ற ஆட்சி மாற்றத்தினால் நாம் அச்சமடைந்துள்ளோம். எம்மோடு இருக்கின்ற பிள்ளைகளுக்கு என்ன நடக்கும் என்ற பயம் மேலோங்கியிருக்கிறது. மீண்டும் ஒரு இன அழிப்பு ஏற்படுமா? என்ற அச்சமும் எழுந்துள்ளதாக வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தினர் தெரிவித்தனர்.

நாட்டில் போர்க்குற்றங்கள் நடக்கவேயில்லை என்றும் காணாமல்போனோர் எவருமில்லை என்று கூறியவர்களுமே இப்போது ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருக்கின்றார்கள்.

இவ்வாறானதொரு சூழ் நிலையில் எமக்கு எப்படி நீதி கிடைக்கும் என்ற சந்தேகம் வலுத்திருக்கிறது என்று வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தலைவி கனரஞ்சனி யோகதாஸன் தெரிவித்துள்ளார்.



நாட்டில் போர்க்குற்றங்கள் நடக்கவேயில்லை என்றும் காணாமல்போனோர் எவருமில்லை என்று கூறியவர்களே இப்போது ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருக்கின்றார்கள். இப்படியொரு பின்னணியில் எமக்கு எப்படி நீதி கிடைக்கும் என்ற சந்தேகம் வலுத்திருக்கிறது.

நாங்கள் தனிநாடு கோரி ஆயுதமேந்திப் போராடவில்லை. மாறாக காணாமலாக்கப்பட்ட எமது சொந்தங்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்து கொள்வதற்காகவே போராடுகின்றோம்.

இதற்குத் தீர்வைப் பெற்றுத் தருவதற்காக 2016 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தினால் 2020 ஆம் ஆண்டாகியும் எவ்வித தீர்வையும் வழங்க முடியவில்லை. மரணச்சான்றிதழையும், இழப்பீட்டையும் வழங்குகின்ற அவர்களால் நீதியை வழங்குவதென்பது இனியும் சாத்தியப்படாது.

ஆகவே இறுதி நம்பிக்கையாக எமக்கான நீதியை சர்வதேச சமூகம் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதே ஒரே எதிர்பார்ப்பாக இருக்கின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (2)

# 19 இல் கன்னி அமைச்சரவை



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான புதிய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை பொறுப்பேற்றல் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

26 அமைச்சுக்கள். 39 இராஜாங்க அமைச்சுக்கள் மற்றும் 25 மாவட்டங்களுக்கான குழுத்தலைவர் பதவிகளுக்கான நியமனங்கள் ஜனாதிபதியால் வழங்கி வைக்கப்பட்டன.

புதிய அமைச்சரவையின் கன்னி கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இடம் பெறவுள்ளது. வழமைக்கு மாற்றீடாக பல புதிய அம்சங்கள் முதலாவது அமைச்சரவையில் முன்னெடுக்கப்படவுள்ளது.

26 அமைச்சர்கள் மற்றும் 39 இராஜாங்க அமைச்சர்களும் எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் தங்களின் கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும் என ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். 16 ஆம் திகதிக்கு முன்னர் அமைச்சர்களும் இராஜாங்க அமைச்சர்களும் தங்களின் கடமைகளைத் துரிதமாக பொறுப்பேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

9 ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு எதிர்வரும் வியாழக்கிழமை 20 ஆம் திகதி கூடவுள்ளது. சபாநாயகர் மற்றும் பிரதி சபாநாயக்கர் ஆகிய முக்கிய பதவிகள் குறித்து அன்றைய தினம் கவனம் செலுத்தப்படும். சபாநாயகர் பதவிக்கு பல்வேறு தரப்பினரது பெயர்கள் இது வரையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# பாரதம்

# சுதந்திரதினக் கொண்டாட்டம் சீர்குலைக்க தீவிரவாதிகள் திட்டம்

## உளவுத்துறை எச்சரிக்கை



(ஜம்மு)
சுதந்திர தினக் கொண்டாட்டத்தை சீர்குலைக்க தீவிரவாதிகள் திட்டமிட்டிருப்பதாக உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனையடுத்து, நாட்டின் ஜம்மு காஷ்மீர் பகுதியில் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எல்லை பாதுகாப்பு படையினர் பலத்த பாதுகாப்பு மற்றும் ரோந்துப் பணியில் ஈடுபட்டு எல்லைகளை கண்காணித்து வருகின்றனர்.

மும்பையில் கடல்வழியாக தீவிரவாதிகள் ஊடுருவியதைப் போல் இந்திய பாகிஸ்தான் எல்லையில் பாயும் செனாப் நதி வழியாக படகுகள் மூலமும் தீவிரவாதிகள் ஊடுருவலாம் என்பதனால், நதிக்கரைகளில் முகாம் அமைத்து படைவீரர்கள் பாதுகாப்புப் பணியை மேற்கொண்டுள்ளனர்.

இந்தியாவின் சுதந்திர தினம் நாளை 15 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

இந்த ஆண்டு கொரோனா தொற்றை கருத்திற்கொண்டு சமூக இடைவெளியைப் பின்பற்றி பாதுகாப்பான முறையில் விழாவை நடத்த ஏற்கனவே மத்திய அரசு வழிகாட்டி நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது.


அதைப் பின்பற்றி விழாவை நடத்த தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

அதன் அடிப்படையில் பல்வேறு கட்டுப்பாடுகளை வகுப்பது குறித்து அரசு அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# ஆதிச்சநல்லூரில் 3000 ஆண்டுகள் பழைமையான குறியீடுகள், கூரை ஓடுகள் கண்டெடுப்பு

(சென்னை)
ஆதிச்சநல்லூரில் அகழாய்வில் 3000 ஆண்டுகள் பழைமையான குறியீடுகள் மற்றும் கூரை ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உலக நாகரீகத்தின் தொட்டில் என அழைக்கப்படும் ஆதி ச்சநல்லூரில் தமிழக அரசு சார்பில், அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தொல்லியல் துறை அகழாய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.



அங்கு ஏராளமான முதுமக்கள் தாழிகள், மட்பாண்ட பொருட்கள், இரும்பு மற்றும் வெண்கலத்தாலான பொருட்கள் போன்றவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் தற்போது 3000 ஆண்டுகள் பழைமையான குறியீடுகள் மற்றும் கூரை ஓடுகள் இங்கு கிடைத்துள்ளன. அந்தக் குறியீடுகளில் ஏணி, இலை போன்று வரையப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# புபோனிக் பிளேக் நோய் மீண்டும் ஒருவர் உயிரிழப்பு

## அச்சத்தில் மங்கோலிய மக்கள்

(மங்கோலியா)
மங்கோலியாவில் புபோனிக் பிளேக் நோய் தொற்று உறுதி செய்யப்பட்டு, வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நபர் பரிதாபமாக உயிரிழந்தார்.

சீனாவில் தோன்றிய கொரோனா வைரஸ் தற்போது ஒட்டுமொத்த உலகத்தையும் திணறடித்து வருகிறது. இதில் இருந்து மீண்டு வருவதற்காக உலக நாடுகள் போராடி வருகின்றன.

இந்த நிலையில் சீனா மற்றும் அதன் அண்டை நாடான மங்கோலியாவில் பரவி வரும்



புபோனிக் பிளேக் நோய் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

புபோனிக் பிளேக் என்பது பக்ரீரியா நோய். இது மர்மோட் போன்ற காட்டில் வாழும் கொறித்து தின்னும் உயிரினங்களால் பரவுகிறது. இதற்கு உரிய சிகிச்சை அளிக்காவிட்டால், பாதிக்கப்பட்ட நபர் 24 மணி நேரத்தில் உயிரிழக்கக்கூடும் என உலக சுகாதார அமைப்பின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்த நோய் மற்றவர்களுக்கும் பரவ வாய்ப்புள்ளதால் சீனா மற்றும் மங்கோலியாவின் சில பகுதிகளில் 3 ஆம் கட்ட எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் முதலாம் திகதி மேற்கு மங்கோலியாவின் கோவ்ட் மாகாணத்தில் 2 பேருக்கு புபோனிக் பிளேக் நோய் இருப்பது உறுதிசெய்யப்பட்டது. அவர்கள் 2 பேரும் மர்மோட் இறைச்சியை சாப்பிட்டதாக தெரிவித்தனர்.

எனவே மர்மோட் இறைச்சியை மக்கள் சாப்பிட வேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

எனினும் கடந்த மாதம் 15ஆம் திகதி 15 வயதான சிறுவன் ஒருவன் புபோனிக் பிளேக் நோயால் உயிரிழந்தான்.

இந்த நிலையில் மங்கோலியாவில் புபோனிக் பிளேக் நோய்க்கு மேலும் ஒருவர் பலியாகி உள்ளார்.

42 வயதான இவர் புபோனிக் பிளேக் நோய் தொற்று உறுதி செய்யப்பட்டு, வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் பரிதாபமாக உயிரிழந்தார்.

அவருடன் தொடர்பில் இருந்த அனைவரும் மருத்துவ கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளதாக மங்கோலிய அரசு சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. (2)

# அ…
# கட்டுப்படு…

## முதலீட்டா…




(றியோடி ஜெனிரோ)
பிரேசிலின் அமேசன் மழைக்காடுகளில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீயை கட்டுப்படுத்தாவிட்டால், 2 டிரில்லியன் டொலருக்கும் அதிகமான மதிப்பிலான முதலீடு

# கொரோனாவு…
# ஆய்வு செய்ய…

(ஜெனீவா)
கொரொனா வைரஸுக்கு எதிராக ரஷ்யா உருவாக்கியுள்ள உலகின் முதலாவது தடுப்பூசியின் சோதனை விபரங்களை ஆய்வு செய்ய ஆர்வமாக உள்ளதாக உலக சுகாதார நிறுவனத்தின் ஐரோப்பிய ஊடக அலுவலகம் தெரிவித்துள்ளது.

உலகை அச்சுறுத்தும் கொரோனா வைரஸுக்கு எதிராக தடுப்பூசியை உருவாக்கும் முயற்சியில் இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா, இஸ்ரேல் என பல நாடுகளும் களமிறங்கியுள்ளன.

அந்த வகையில் ஏறத்தாழ 165 தடுப்பூசிகளை உருவாக்கும் பணியில் விஞ்



# வெளிநாடு

# அமேசன் மழைக்காடுகளில் தீ;
# டுத்தாவிட்டால் முதலீடுகள் முடக்கப்படும்
## ட்டாளர்கள் பிரேஸிலுக்கு எச்சரிக்கை





களை திரும்பப் பெறப்போவதாக சர்வதேச முதலீட்டாளர்கள் எச்சரித்துள்ளனர்.

கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்களை அதிகரிக்க, அமேசன் காடுகள் அழிக்கப்படுவதாக குற்றம் சாட்டப்பட்டு வரும் நிலையில், இந்த ஓகஸ்ட் மாத தொடக்கத்தில் இருந்து 10 நாட்களில் மட்டும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காட்டுத் தீ ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் முதல் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இன்பே (Inpe) நிறுவனத்தின் தரவுகளின்படி இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. ஓகஸ்ட் முதல் ஆறு நாட்களில் அமேசனில் 5 ஆயிரத்து 860 தீ விபத்துக்களை இந்த நிறுவனம் பதிவு செய்துள்ளது.

இது கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியிலிருந்து ஏழு சத வீதம் அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டு எரிக்கப்பட்ட சில பகுதிகள் இப்போது கால்நடை வளர்ப்பிற்கு பயன்படுத்தப்படுகின்றன.

மேய்ச்சலுக்கு நிலத்தை அழிக்க அமேசன் முழுவதும் தீ பொதுவாக பயன்படுத்தப்படுகிறது.

இதேவேளை, இந்த தீ விபத்துக்கள் இயற்கையாக ஏற்படுவதில்லை எனவும், விவசாயம் மற்றும் மேய்ச்சலுக்காக சட்டவிரோதமாக் மனிதர்கள் காட்டினை அழிக்கிறார்கள் என்றும் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு, மே முதல் ஒக்டோபர் வரை பெரும் தீ விபத்து அமேசன் மழைக்காடுகளில் பரவி பேரழிவினை ஏற்படுத்தியிருந்தது.

ஆயிரக்கணக்கான கிலோமீற்றர் காடுகள் எரிந்து சாம்பலாகியமை குறிப்பிடத்தக்கது. (2)

# ோவுக்கு எதிரான உலகின் முதலாவது தடுப்பூசி
# ய்ய தயாராகும் உலக சுகாதார நிறுவனம்



ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில், கொரோனா வைரஸுக்கு எதிராக உலகின் முதல் தடுப்பூசியை தாங்கள் உருவாக்கியுள்ளதாக ரஷ்யா அண்மையில் அறிவித்தது.

அந்த நாட்டின் இராணுவ அமைச்சும் கமலேயா தொற்றுநோயியல், நுண்ணுயிரியல் அறிவியல் ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து உருவாக்கியுள்ள இந்த தடுப்பூசிக்கு 'ஸ்புட்னிக்-5' என பெயரிடப்பட்டுள்ளது.

இந்தத் தடுப்பூசி, தேவையான சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுவிட்டதாகவும் இத்தடுப்பூசி ஆற்றல் மிக்கது, பாதுகாப்பானது, நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குகிறது என்பதெல்லாம் சோதனைகளில் நிரூபணமாகி இருக்கிறது என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அறிவித்துள்ளார்.

இந்த தடுப்பூசி உலக அளவில் பெரும் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ள நிலையில், இதுகுறித்து ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள உலக சுகாதார நிறுவனத்தின் ஐரோப்பிய ஊடக அலுவலகம், ரஷ்ய கூட்டமைப்பின், தேசிய மருந்துகள் பதிவு அமைப்பில் கொரோனா வைரஸ் தடுப்பூசி பதிவு செய்யப்பட்டுவிட்டது என்பதை உலக சுகாதார நிறுவனம் அறிந்துள்ளது.

இது தொடர்பாக ரஷ்ய விஞ்ஞானிகளுடனும் அதிகாரிகளுடனும் தொடர்ந்து தொடர்பில் இருக்கிறோம் என்றும் தடுப்பூசி சோதனை விபரங்களை ஆய்வு செய்ய ஆர்வமாக உள்ளதாக அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தடுப்பூசி ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியின் அனைத்து முன்னேற்றங்களையும் உலக சுகாதார நிறுவனம் வரவேற்கிறது என்றும் ஐரோப்பிய ஊடக அலுவலகம் கூறியுள்ளது.

மேலும், உலகமெங்கும் இதுபோன்ற ஒவ்வொரு தடுப்பூசியும் விரைவானதாகவும் நியாயமானதாகவும் எல்லோரும் நாடுவதற்கு சம வாய்ப்பினை தருவதாகவும் அமைய வேண்டும் என்றும் உலக சுகாதார நிறுவனத்தின் ஐரோப்பிய ஊடக அலுவலகம் மேலும் தெரிவித்தது. (2)



# பக்றீரியா தாக்கத்தால் கென்யாவில் நூற்றுக்கணக்கான ஒட்டகங்கள் பலி

(கென்யா)

பக்றீரியா தொற்றுக் காரணமாக வடகிழக்கு கென்யாவில் பல மாதங்களாக நூற்றுக்கணக்கான ஒட்டகங்கள் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. எனினும் இந்த உயிரிழப்புக்கு கொரோனா வைரஸ் தாக்கம் காரணம் அல்ல என்றும் அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அந்நாட்டின் கால்நடை சேவைகள் இயக்குநர் சார்லஸ் ஓச்சோடோ, ஒட்டகங்கள் ஒரு பக்றீரியா தொற்றுக் காரணமாக இறந்துள்ளன.

இந்த பக்றீரியா கால்நடைகளில் சுவாச நோயை ஏற்படுத்துகிறது. சரியான நேரத்தில் சிகிச்சையளிக்கப்படாவிட்டால் உயிரிழப்பை ஏற்படுத்துகிறது எனத் தெரிவித்தார்.

இந்த பக்றீரியா தாக்கம் காரணமாக இரண்டு வயதுக்கும் குறைவான இளம் ஒட்டகங்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன.


இந்த மாத தொடக்கத்தில், வடக்கு கென்யாவின் மார்சபிட் கவுண்டியில் உள்ள சுகாதார அதிகாரிகள், மார்சபிட்டில் மட்டும் 200 இற்கும் மேற்பட்ட ஒட்டகங்கள் உயிரிழந்துள்ளதாக உறுதிப்படுத்தியுள்ளனர். (2)

# நோயற்ற சமூகமொன்றை கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்

## சுகாதார அமைச்சர் பவித்ரா

(கொழும்பு)

**நாட்டு மக்களின் நலன் தொடர்பில் நாம் அக்கறையுடன் செயற்படுவோம். நாட்டில் பிரதானமாக காணப்படும் கொரோனா வைரஸ் மற்றும் டெங்கு போன்ற தொற்று நோய்கள் அதேபோல் தொற்றா நோய்கள் பலவற்றினால் மக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.**



நோயற்ற சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்டதன் பின்னர் நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைக்கையிலேயே சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

நாட்டுமக்களின் நலன் தொடர்பில் நாம் அக்கறையுடன் செயற்படுவோம். நாட்டில் பிரதானமாக காணப்படும் கொரோனா வைரஸ் மற்றும் டெங்கு போன்ற தொற்று நோய்கள், அதேபோல் தொற்றா நோய்கள் பலவற்றினால் மக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக இருதய நோய், புற்றுநோய், நீரிழிவு போன்ற பல்வேறு நோய்களினால் நாட்டில் அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே நாட்டு மக்களின் உணவுப்பழக்க வழக்கங்கள், அதேபோல் சரியான முறையில் பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் மூலம் தொற்று நோய்கள் மற்றும் தொற்றா நோய்கள் ஏற்படுவதைத் தடுக்க முடியும்.

எனவே நோயற்ற சமூகமொன்றை கட்டியெழுப்புவதனை குறிக்கோளாக கொண்டு நாம் செயற்படுவோம்என அவர் மேலும் தெரிவித்தார். (2)

# மேலும் ஒருவருக்கு கொரோனா தொற்று

(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 881 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலுமொருவர் நேற்று முன்தினம் அடையாளம்காணப்பட்ட நிலையிலேயே இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய ஒருவருக்கே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் சிகிச்சை பெற்று வந்த மேலும் 16 பேர் நேற்று முன்தினம் குணமடைந்தனர்.

இதற்கமைய, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 638 ஆக உயர்வடைந்துள்ளது.

மேலும், 49 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 232 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (2)

# புதிய அமைச்சர்களுக்கு ஜனாதிபதி விடுத்துள்ள அதிரடி உத்தரவு

(கொழும்பு)



தற்போது அரசு நிறுவனங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள தலைவர்கள் உட்பட, இயக்குநர்கள் குழுவின் உறுப்பினர்கள், தன்னுடைய ஒப்புதல் இல்லாமல் மாற்றப்படக்கூடாது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமைச்சர்களுக்கு உத்தரவிட்டார்.

அதற்கு உரித்தான நியமனங்கள் அந்த நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட சிறப்புக் குழுவால் செய்யப்படும்.

மேலும் இது தொடர்பான உத்தரவை அனைத்து அமைச்சர்களுக்கும் ஜனாதிபதியின் செயலாளர் பி.பி. ஜெயசுந்தர அனுப்பியுள்ளார்.

அமைச்சுகளுக்குப் பொறுப்பான அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் நேற்று முன்தினம் காலை கண்டி ஸ்ரீதலதா மாளிகை வளாகத்தில் உள்ள மகுல்மடுவ மண்டபத்தில் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

இந்நிலையில், பதவிப்பிரமாணம் செய்து கொண்ட அனைத்து அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கு ஜனாதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். (2)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மன்னிப்பு

ஒரு சண்டையை ஆரம்பிக்கிறது சுலபம். அதை நிறுத்துவது தான் கஷ்டம். இரண்டு பேர் சண்டை போட்டுக் கொள்கின்றார்கள். அதை நிறுத்த வேண்டும் என்றால் அந்த இரண்டு பேரிலே யாராவது ஒருத்தர் விட்டுக் கொடுக்க வேண்டும்... அடுத்தவர்களை மன்னிக்க வேண்டும்.. அப்போதுதான் அது ஓயும். இல்லை என்றால் அது ஓயாது. யேசுவின் சீடர்களிலே ஒருத்தன் பீற்றர். அவன் தன்னுடைய சகோதரனுடன் அடிக்கடி சண்டை போட்டுக் கொண்டிருந்தான். அவன் யேசுவிடம் போய் கேட்டிருக்கின்றான். "என்னுடைய சகோதரனை நான் எத்தனை தடவை மன்னிப்பது?" ஏற்கனவே ஏழு தடவை அவனை மன்னித்திருக்கின்றேன்" என்றான்.

அதற்கு யேசுபிரான் சொல்லியிருக்கின்றார். உன்னுடைய சகோதரனை எத்தனை தடவை மன்னிக்க வேண்டும்? என்பதற்கு அளவு ஏதும் கிடையாது. எப்போது எல்லாம் உன்னுடைய சகோதரன் உன்னை கோபமடையச் செய்கின்றானோ அப்போதெல்லாம் அவனை நீ மன்னிக்க வேண்டும் என்றார். பீற்றருக்கு இன்னமும் இது குழப்பமாக இருந்தது. தெளிவு ஏற்படவில்லை இப்போது யேசு பிரான் பீற்றருக்கு ஒரு கதை சொல்கின்றார். அந்தக் கதை என்னவென்றால், ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார். ஒருநாள் தனியாக உட்கார்ந்து அரண்மனை கணக்கு வழக்குகளை சரிபார்த்துக் கொண்டிருந்தார். அப்பொழுது தான் ஒரு விடயம் தெரிந்தது. அரண்மனை சேவகன் ஒருத்தன் பத்தாயிரம் பொற்காசுகள் அரண்மனைக்கு செலுத்த வேண்டியிருக்கு. எப்பொழுதோ கடன் வாங்கியிருக்கின்றான். இன்னும் திருப்பிக் கொடுக்கவில்லை. உடனே அந்த ஆளைக் கூப்பிட்டார். "இதோ பாரப்பா... நீ அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய பத்தாயிரம் பொற்காசுகளைத் திருப்பிக் கொடுத்துவிடு.. அப்படி கொடுக்க முடியவில்லை என்றால் உன்னையும் உன் மனைவியையும் குழந்தைகளையும் உன்னிடம் இருக்கின்ற பொருள்களையும் விற்று அரசாங்கக் கடனைத் தீர்த்துக் கொள்" என்றார்.

அந்த சேவகன் பார்த்தான்..வேறு வழியே இல்லை...பொத்தென்று ராஜா காலிலே விழுந்தான்.. "என் மேலே கருணை காட்டுங்கள் ராஜா.. " என்றான்.

உடனே ராஜா பார்த்தார். சரி. எழுந்திரு . நான் உன்னை மன்னிக்கின்றேன். நீ எதையும் திருப்பி செலுத்த வேண்டாம். போய்வா என்று அனுப்பி விட்டார்.

இவன் சந்தோசமாகப் போய்க் கொண்டிருந்தான். வழியிலே இவனிடம் ஏற்கனவே பத்து பொற்காசு கடன் வாங்கியிருக்கின்ற இன்னொருவன் வந்த கொண்டிருந்தான். அவனை இவன் பிடித்துக் கொண்டு...

என்னிடம் வாங்கிய கடனை இப்பொழுதே திருப்பிக் கொடு என்று கேட்க ஆரம்பித்துவிட்டான். இவன் வாங்கிய பெரிய கடனையே ராஜா மன்னித்து விட்டுவிட்டார். ஆனால் இவனிடம் இன்னொருத்தன் வாங்கிய சின்ன கடனை மன்னிக்க இவன் தயாராக இல்லை.

என்னை இப்பொழுது விட்டுவிட்டு... இன்னும் கொஞ்ச நாளிலே உன்னிடம் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுத்துவிடுகின்றேன் என்று அவன் எவ்வளவோ சொல்லி பார்த்தான். இவன் கேட்கவில்லை..நீதிமன்றுக்குப் போனான். நீதிபதி விசாரித்தார். பத்து பொற்காசையும் திருப்பிக் கொடுக்கின்ற வரைக்கும் அவனுக்கு சிறைத்தண்டனை என்று தீர்ப்பு கூறிவிட்டார்.

அரண்மனையிலே இருந்த வேறு சில சேவகர்கள் இதைக் கேள்விப் பட்டார்கள். உடனே ராஜாவிடம் போய் விடயத்தைச் சொன்னார்கள். மன்னா! பத்தாயிரம் கொடுக்க வேண்டிய கடனாளியை நீங்கள் மன்னித்து விட்டு விட்டீர்கள். ஆனால் அவன்... தன்னிடம் பத்து பொற்காசு கடன் வாங்கிய ஒருவனை மன்னித்து,விடுவதற்குத் தயாராக இல்லை. சிறைத் தண்டனை வாங்கிக் கொடுத்துவிட்டான். கடன் தீருகின்ற வரைக்கும் அவன் சிறையில் இருக்க வேண்டும் என்று தீர்ப்பு என்று விபரத்தைச் சொன்னான்.

உடனே ராஜா... தன்னிடம் கடன் வாங்கிய அந்த ஆசாமியை அழைத்துக் கொண்டு வரச் சொன்னார். ராஜா சொன்னார். "இதோ பாரப்பா ... உன்னிடம் கடன் பட்டவனை மன்னிப்பதற்கு ,நீ தயாராக இல்லை... " அதனாலே நானும் உன்னை மன்னிப்பதற்குத் தயாரில்லை. உனக்கும் இப்பொழுது அதே தண்டனையைக் கொடுக்கின்றேன். உனக்கும் இப்போது அதே தண்டனையைக் கொடுக்கிறேன். பத்தாயிரம் பொற்காசுகள் திருப்பிக் கொடுக்கிற வரைக்கும் நீயும்சிறையிலேயே இரு " என்று சொல்லி விட்டார்.

இதுதான் இயேசு நாதர் பீற்றரிடம் சொன்ன கதை. ஒரு தவறு செய்கின்றோம். நாம் செய்தது தவறு என்று உணர்கிறோம். இனிமேல் அதேபோல் செய்யக் கூடாது என்று முடிவு செய்கின்றோம். அப்படி செய்தால் தான் ஆண்டவனிடம் மன்னிப்புக் கேட்கிற தகுதி நமக்கு உண்டு என்று அர்த்தம்.

நாம் இன்னொருத்தரை மன்னிப்பதற்குத் தயாராக இல்லாத போது நம்மை மட்டும் இன்னொருத்தர் மன்னிக்க வேண்டும் என்று நினைக்கிறது எந்த விதத்திலே நியாயம்? இந்தக் காலத்து ஆசாமி சொன்னார். என்னிடம் ஒருவர் 10 ரூபா கடன் வாங்கியிருந்தான்... அதைத் திருப்பிக் கொடுப்பதற்காக வந்தான்... பெருந்தன்மையாக வேண்டாம் என்று சொல்லி விட்டான்.. என்றார். ஏன் ? என்று கேட்டேன். "அதை நான் திருப்பி வாங்கிக் கொண்டால்' அவனே நாளைக்கு என்னிடம் வந்து 100 ரூபா கடன் கேட்பான் " என்றார்.

# தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

# நிரந்தர வீடு-ஜீவன் தொண்டமான் நடவடிக்கை

(லிந்துலை)

**லிந்துலை, பம்பரகலை நடுப்பிரிவு தோட்டத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்காலிக இருப்பிடங்களை அமைப்பதற்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிரந்தர வீடுகளை அமைப்பதற்கும் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் நடவடிக்கை எடுத்துள்ளார்.**



இராஜாங்க அமைச்சராக பதவியேற்ற கையோடு கண்டியிலிருந்து நுவரெலியாவுக்கு திரும்பிய ஜீவன் தொண்டமான், முதலில் தீயினால் பாதிக்கப்பட்ட லிந்துலை பம்பரகலை நடுப்பிரிவு தோட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டார்.

அங்கு தீவிபத்தால் பாதிக்கப்பட்டுள்ள 24 குடும்பங்களைச் சேர்ந்த உறுப்பினர்களை சந்தித்து ஆறுதல் கூறிய ஜீவன் தொண்டமான், தற்காலிகமாக தங்குமிட வசதிகளையும், அவர்களுக்கான உலர் உணவுகளையும் வழங்க பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாகவும் அக்கரப்பத்தனை பிரதேச சபையின் ஊடாகவும் ஏற்பாடு செய்தார்.

அத்துடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகள் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (2)

# ஐ.தே.கவில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களுடன் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படத்தயார்

## திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ள நிலையில் எதிர்வரும் 20 ஆம் திகதி புதிய நாடாளுமன்றம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், பேச்சுவார்த்தைக்கு தயார் என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். எவ்வாறிருப்பினும் ஐக்கிய தேசியக் கட்சி அதற்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களுடன் ஐக்கிய மக்கள் சக்தி இணைந்து செயலாற்றுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்படுமானால் அதற்கு எமது தரப்பும் தயாராகவுள்ளது.

அனைவரது கருத்துக்களையும் இணைத்துக் கொண்டு பயணிப்பது அவசியமாகவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியிடம் கருத்துகள் மற்றும் தீர்மானங்கள் காணப்படுமாயின் தாம் அதனை சிறந்த ஒரு விடயமாக நோக்குவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பொறுப்புக்களை வழங்குதல் மற்றும் எதிர்காலம் குறித்து கலந்துரையாடி தீர்மானமொன்றை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் - சீன விமான சேவைகள் கொரோனாத் தொற்று காரணமாக இடைநிறுத்தம்

(கொழும்பு)

பல பயணிகள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், ஷாங்காய்க்கான பல விமான சேவைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக சீனாவின் சிவில் விமான போக்குவரத்து அதிகார சபை அறிவித்துள்ளது.

அதன்படி எடிஹாட் ஏர்வேஸின் அபுதாபி-ஷாங்காய் விமானம், சீனா ஈஸ்டர்ன் ஏர்லைன்ஸின் மணிலா-ஷாங்காய் விமானம் மற்றும் இலங்கை ஏர்லைன்ஸின் கொழும்பு-ஷாங்காய் விமானம் ஆகியவை இடைநிறுத்தப்பட்டுள்ளன.

சீனாவின் சிவில் விமான போக்குவரத்து அதிகார சபை நேற்று முன்தினம் புதன் கிழமை வெளியிட்ட அறிக்கையின்படி,

எட்டிஹாட் ஏயர்வேஸின் EY862 என்ற விமானத்தின் ஆறு பயணிகள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சீனா ஈஸ்டர்ன் ஏர்லைன்ஸின் MU 212 என்ற விமானத்தில் ஆறு பயணிகள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை ஏர்லைன்ஸின் யுஎல் 866 விமானத்தின் 23 பயணிகள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை கடந்த 7 ஆம் திகதி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இம்மாதம் 17 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் இந்த இடைநிறுத்த நடவடிக்கையில், எட்டிஹாட் ஏயர்வேஸ் மற்றும் சீனா ஈஸ்டர்ன் ஏர்லைன்ஸின் விமான சேவைக்கான தடை உத்தரவு ஒரு வாரம் நீடிக்கும்.

அதே நேரத்தில் இலங்கை ஏயர்லைன்ஸின் விமான சேவைக்கான தடையுத்தரவு நான்கு வாரங்களுக்கு நீடிக்கப்படும். (2)

# நல்லூர்க் கந்தனுக்கு இன்று வேல் விமானத் திருவிழா



## அன்பே உருவான வடிவேலன்

ஆறுபடைவீடு கொண்ட வடிவேலன் - அவன்
ஈழத்திலும் ஆறுபடை வீடமைத்தவன்
ஆதியந்தமிலா முக்கட் பரமர்க்கு
தனயனானவர் -அவன்
பரமர்க்கே சுருதியின் முற்பட்டது போதித்தவன்
கார்த்திகைக் காரிகையர்
கையில் தவழ்ந்தவன் -அவன்
ஆதிசக்தி அன்னை அணைக்க ஆறுமுகமானவன்
குழந்தையாக குமரனாக
அழகுக்கோலம் கொள்பவன்-அவன்
கோவணாடைத்துறவியாக பழனிமலை மீதமர்ந்தவன்
ஔவையின் தீந்தமிழ் சுவைத்தவன் -அவன்
அருணகிரியின் தேன் தமிழ் பருகியவன்
வள்ளி தெய்வானை சமேதரானவன் - அவன்
நல்லைப்பதிய மர்ந்தே பக்தர்க்கருளும்
அன்பே உருவானவன்

ச.சஜீவன், பன்னாலை.

## காத்திடுவான் நல்லைக் குமரன்

முத்தமிழ் முருகனே,
முக்கண்ணன் புதல்வனே,
தித்திக்கும் தேன் தந்த
செந்தமிழ் முருகனே
வேடுவனாய் வடிவெடுத்து
வள்ளியை மணம் செய்த
வடிவேல் முருகா
கொரோனாவில் இருந்து
மக்களைக் காக்க வந்த
மகேசனின் மைந்தா
உன்பாதம் பணிகின்றோம்
நிம்மதியான வாழ்வு தருவாயா

து.துளசிபன், இடைக்காடு.

## வெற்றி வேலாய் நிற்பவனே...!

குன்று யாவையும் கோயில் ஆக்கியே
என்றும் நீயதில்-உறைவாயே
என்று தானுனை அன்பர் யாவரும்
ஒன்று கூடியே - ஏத்துவார்
மன்றில் ஆடியே மாநிலம் அதைக்
காக்கும் ஈசர்க்கு - இணையாகி
அன்று சூரனை வென்ற வேலென
நின்ற நல்லையின் - பெருமானே!

சின்னையா சிவபாலன்,
கோண்டாவில்.

## சந்தம் சிந்தும் நல்லைக் கந்தன்

ஆளும் யாரும் வீழ்வ தற்கும்
அடி யெடுத்து வைத்தவன்
வீழும் யாரும் மீள்வ தற்கும்
விழிவைக் காட்டி உய்த்தவன்
வாழும் மாந்தர் வினைக ளாய்ந்து
வழிக ளீட்டித் துய்த்தவன்
பாழு ழும் வீழ ஆளும்
பரமன் நல்லைக் கந்தனே!

கலாபூஷணம் சந்தக்கவிஞர்.
நவ.பாலகோபால்



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

43

கலாநிதி முருகர் குணசிங்கம்

ஈழத்தமிழர்கள் தமது குடும்பம், தமது நெருங்கிய உறவினர்கள் என்ற வட்டத்திற்குள் நின்றுகொண்டு அதனைச் சுற்றிச்சுற்றியே தமது அர்ப்பணிப்புகளையும் தியாகங்களையும் செய்பவர்கள் என்றும் அவ்வாறான குறுகிய வட்டச் சுயநல மனப்பான்மை **(Parochial Attitude)** அவர்களின் புவியியல், சமூகப் பின்னணி, சமூகக் கட்டமைப்பு ஆகியவற்றில் இருந்து அவர்களின் முன்னோர்களால் வழங்கப்பட்ட பாரம்பரியச் சொத்தாகவும் **(Legacy)** அது ஈழத்தழிழர்களோடு தொன்று தொட்டே **(Primordial Attitude)** பரம்பரையாக வந்த நோய் எனவும் அவர்களின் தேசத்தில் பொது நன்மை கருதி தொலைநோக்கோடு தேவையானவற்றைச் செய்வதற்கும் தம்மை அர்ப்பணிப்பதற்கும் அடிப்படைக் குணாதிசயங்கள் அவர்களைத் தடுக்கும் காரணிகளாகக் காணப்படுகின்றன.

ஆனால் அவர்கள் தமது சமயத்திற்கும் கலை, பண்பாடு, அரசியல் போன்றவற்றிற்கும் தமது சேமிப்பில் இருந்து ஒரு சிறுதொகைப் பணத்தைக் கொடுக்க முன்வருகின்றார்கள் என்றால் அது அநேகமாக சுயநலத்தின் அடிப்படையிலும் பயத்தின் காரணத்தினாலும் தமது சொந்தப் பெருமை கார்ரணமாகவும் செய்வார்கள் என்றும் ஆனால் இதற்கு அப்பாலும் தேசம் பற்றிய தொலைநோக்குள்ள தாராள மனங்கொண்ட பலர் ஈழத்தமிழர்கள் மக்கள் மத்தியில் இருக்கின்றார்கள்.

அவர்களால்தான் ஈழத்தமிழர் சமூகம் எமது சமய, மொழி, கலை, பண்பாடு, அரசியல் சார்ந்த துறைகளில் வளர்ச்சியும் எழுச்சியும் கொண்டு ஓரளவு முன்னேறிச் செல்கின்றது.

### சமய, கலை, பண்பாடு, மொழி அடையாளங்கள்

இந்த அத்தியாயத்தில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களின் சமய, கலை, மொழி, பண்பாட்டு விழுமியங்களைப் பற்றி முக்கியமான தரவுகளையும் புள்ளி விபரங்களையும் உள்ளடக்கிச் சுருக்கமாக ஆய்வு செய்யப்படும். இந்தியா - தமிழ்நாடு, மலேசியா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து, இத்தாலி, நோர்வே, சுவீடன், டென்மார்க், அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் உள்ள ஈழத்தமிழர்களின் செயற்பாடுகள், சாதனைகள், எதிர்கொண்ட பிரச்சினைகள் முதன்மையாக இடம்பெறும்.

மேற்கண்ட நாடுகளுள் சில நாடுகள் தனித்தனியாகக் கருத்திற் கொள்ளப்பட்டும் தேவை கருதி பொதுவான விடயங்களில் எல்லா நாடுகளும் ஒருங்கு சேர்த்தும் நோக்க வேண்டியது தவிர்க்க முடியாதது ஆகும்.

ஈழத்தமிழர்களின் சமயப் பற்று, சமய வளர்ச்சி **(Religious Affiliation)** சமய எழுச்சி பற்றி நோக்குவதுடன் அவற்றின் வழியாகத் தமது கலை, பண்பாட்டு, விழுமியங்களை ஒருங்கிணைத்து அவைகளைப் பின்பற்றிப் பாதுகாத்து புலம்பெயர்ந்த நாடுகளில் தம் வாழ்வைச் செழுமைப்படுத்தி வாழ்ந்து வருவதை ஆய்வு செய்வதாகவும் இந்த அத்தியாயம் இடம்பெறுகின்றது.

புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்ற ஈழத்தமிழ் இளம் தலைமுறையினர் புதியதொரு சூழ்நிலையில் அறிவியல் பூர்வமாகச் சிந்திக்கும் நவீன உலகத்தில் தமது சமய வாழ்வை, சமய நம்பிக்கையை எவ்வாறு பின்பற்றுகின்றார்கள் என்பது போன்ற கேள்விகளுக்கு விடை காணும் வகையில் இந்த ஆய்வு இடம் பெறும்.

ஈழத்தமிழர்களின் வாழ்க்கை, இந்து சமயத்தின் ஒரு முக்கிய பிரிவான சைவ சமயத்தோடு மிகவும் நெருக்கமாகப் பின்னிப் பிணைந்தது ஆகும்.

வரலாற்றுக் காலத்தில் இருந்து அவர்கள் அதன் தத்துவங்கள், கோட்பாடுகள், நடைமுறைகளைத் தம் அன்றாட வாழ்க்கையோடு இணைத்து அதனைப் பின்பற்றி வாழ்ந்து வருகின்றார்கள்.

இலங்கையில் தமிழர்தான் மூத்த




குடிகள். அவர்கள்தான் அந்நாட்டைப் பண்டைக் காலத்தில் இருந்து ஆண்டு வந்தவர்கள்.

அவர்களது சைவ சமயம்தான் தொடக்கத்தில் இலங்கையில் இருந்தது என்பதை இலங்கையின் உண்மையான வரலாறைத் தெரிந்துகொண்ட வரலாற்று ஆசிரியர்கள் மறுக்க முடியாது.

ஆனால் பௌத்த சமயத்தின் வருகையால் சிங்கள இனத்தின் தோற்றமும் வளர்ச்சியும் தமிழர்களைப் பின்தள்ளியது. சிங்களவர்கள் தம்மை முன்னிலைப்படுத்திக் கொண்டார்கள்.

தமிழர்கள் தம்மையும் தமது நாட்டையும் கடவுள் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையில் தமது தெய்வங்களுக்குக் கோயில் கட்டி வழிபடுகின்ற வழக்கத்தைக் கொண்_வர்கள்.

கிறிஸ்து பிறப் தற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் பே வடக்கில் நகுலேஸ்வரம், கிழக்கில் கோணேஸ்வரம், மேற்கில் திருக்கேதீஸ்வரம், தெற்கில் தொண்டேஸ்வரம் ஆகிய இடங்களில் நான்கு சிவன் கோயில்களைக் கட்டி தமது முழுமுதற் கடவுளாகிய சிவனைக் காவல் தெய்வமாக வழிபட்டு வந்தனர்.

கி.மு.3 ஆம் நூற்றாண்டில் பௌத்த மதம் இலங்கைக்கு வருவதற்கு முன்பாகவும் பாளி, சமஸ்கிருத மொழி ஆகியவற்றில் இருந்து தோற்றம் பெற்ற சிங்கள மொழிக்கும் முன்பாக பல நூற்றாண்டுகளுக்கு முன்பே மேற்கண்ட சைவக் கோயில்கள் தோற்றம் பெற்றன என்பதை யாராலும் மறுக்க முடியாது.

இதற்கு ஆதாரமாகக் கூறுவதானால் கி.பி. 7 ஆம், 8 ஆம் நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டில் சைவ சமயம் மிகவும் உச்சம் பெற்ற காலகட்டத்தில் நான்கு நாயன்மார்களுள் ஒருவரான திருஞானசம்பந்தர் கோணேஸ்வரத்தில் உள்ள சிவன் கோயிலின் சிறப்பையும் மகிமையையும் புகழ்ந்து பாடி இருக்கின்றார்.

அப்பர் சுவாமிகள் திருக்கேதீஸ்வரத்திற்கு வந்து சிவனை வழிபட்டு அத்தலத்தின் சிறப்பையும் பாடி இருக்கின்றார். அவர்கள் பாடல்களில் மேற்கண்ட கோயில்கள் எவ்வளவு சிறப்பாகவும் பாரிய அமைப்பாகவும் இருந்துள்ளது என்பதனை அறிய முடிகின்றது.

அவ்வாறாயின் கட்டப்பட்டு வழிபாடுகள் நடந்திருக்க வேண்டும். பௌத்தம் வரும்முன் இலங்கையை ஆட்சி செய்த தமிழ் அரசர்களும் சைவ சமயத்தையே தமது மதமாகக் கொண்டு உள்ளார்கள்.

ஈழத்தமிழர்கள் சிங்களவர்களால் பின்தள்ளப்பட்டபோது இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளைத் தமது தாயகமாக ஆக்கிக் கொண்டனர்.

அங்கே மூலை முடுக்கெல்லாம் சிறியதும் பெரியதுமாக ஆயிரக்கணக்கான சைவக் கோயில்களைக் கட்டி பூசைகள் செய்து வழிபட்டு தொடர்ச்சியாகப் பல விழாக்களைக் கொண்டாடி வந்தார்கள்.

சிங்கள அரசு ஈ ழத்தமிழர் களை இனப்படுகொலை செய்யத் தொடங்கியது முதல் சுமார் பத்து இலட்சத்திற்கும் மேலான ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து உலகின் பல்வேறு நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர்.

ஆயினும் அவர்களது சமய நம்பிக்கை, கலை, பண்பாடு, மொழி விழுமியங்களைச் சிங்கள இனவாத அரசால் பறிக்க முடியவில்லை. ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் தமது சமய உணர்வுகளை விதைத்து முளைக்க விட்டுத் தண்ணீர் ஊற்றி வளர்த்து வருகின்றார்கள்.

ஈழத்தமிழர்களுள் மிகச் சிறுபான்மையினர் கத்தோலிக்க புரட்டஸ்தாந்து மதங்களைச் சேர்ந்த கிறிஸ்தவர்களாகவும் இருக்கின்றனர்.

போர்த்துக்கீசர் 16 ஆம் நூற்றாண்டில் தமிழ் ஈழத்தைக் கைப்பற்றியபோது கத்தோலிக்க மதமும் ஒல்லாந்தர்கள், போர்த்துக்கீசரிடம் இருந்து 17 ஆம் நூற்றாண்டில் தமிழ் ஈழத்தைக் கைப்பற்றியபோது புரட்டஸ்தாந்து மதமும் பரப்பப்பட்டன.

கணிசமான தமிழர்கள் வலுக்கட்டாயமாகவும் தமது சொந்த நலன் கருதியும் மதமாற்றத்திற்கு உட்பட்டனர். அவர்களைத் தொடர்ந்து 18 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஒல்லாந்தரிடம் இருந்து பிரித்தானியர்கள் தமிழ் ஈழத்தைக் கைப்பற்றியபோது சகலருக்கும் மத சுதந்திரம் வழங்கப்பட்டது.

எனவே கிறிஸ்தவர்களாக மாறிய 60 விழுக்காடு சைவர்களுள் சுமார் 80 விழுக்காட்டினர் மீண்டும் தமது சைவ சமயத்திற்குத் திரும்பி விட்டனர்.

எனவே இப்போது ஈழத்தமிழர்களுள் மிகக்குறைந்த வீதத்தினரே தொடர்ந்து கிறிஸ்தவர்களாக இருந்து வருகின்றனர்.

அவர்களுள் கணிசமான தொகையினர் 1970 களில் தமிழ் ஈழத்தில் இருந்து புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளில் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர். அந்நாடுகளில் உள்ள கிறிஸ்தவத் தேவாலயங்களில் தமது வழிபாடுகளைத் தொடர்ந்து வருகின்றனர்.


முதலில் தமிழ்நாட்டில் உள்ள அகதி முகாம்களிலும் அகதி முகாம்களுக்கு வெளியிலும் வாழும் ஓர் இலட்சத்திற்கும் மேலான ஈழத்தமிழ் அகதிகளின் சமய,. மொழி, பண்பாட்டு, கலை நிலைமைகள் பற்றி மிகச் சுருக்கமாகக் காண்போம்.

தமிழ்நாட்டில் கோயில்கள் இல்லாத தெருக்களோ ஊர்களோ நகரங்களோ இல்லை என்கின்ற அளவிற்கு மூலை முடுக்கெல்லாம் சைவக் கோயில்களும் கிறஸ்தவ ஆலயங்களும் காணப்படுகின்றன.

இதனால் ஈழத்தமிழர்கள் இங்கு கோயில்களைக் கட்ட வேண்டிய தேவை இல்லை. நிலம் வாங்கி அதில் கோயில் கட்டுவதற்குச் சட்டப்படியான அனுமதியை இந்திய மத்திய மாநில அரசுகளிடம் இருந்து பெறவும் முடியாது. கோயில்கள் கட்டும் அளவிற்குத் தேவையான பண வசதியும் அவர்களிடம் இல்லை.

(தொடரும்)

# ராஜஸ்தான் பயிற்சியாளருக்கு கொரோனாத் தொற்று



ஐ.பி.எல். ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் பீல்டிங் பயிற்சியாளருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஐ.பி.எல். 2020 சீசன் ஐக்கிய அரபு அமீரகத்தில் அடுத்த மாதம் 19 ஆம் திகதி தொடங்குகிறது. இதற்காக அணிகள் எதிர்வரும் 21 ஆம் திகதி டுபாய் புறப்பட உள்ளது. புறப்படுவதற்கு முன் அணியைச் சேர்ந்த அனைவருக்கும் இரண்டு முறை கொரோனா பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். கொரோனா இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே டுபாய் செல்ல அனுமதிக்கப்படுவார்கள். இந்நிலையில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் பீல்டிங் பயிற்சியாளர் திஷந்த் யாக்னிக் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இதை அவர் தனது டுவிட்டர் மூலம் உறுதிப்படுத்தியுள்ளார். மேலும், "கடந்த 10 நாட்களாக தன்னுடன் தொடர்பில் இருந்தவர்கள் பரிசோதனை செய்து கொள்ளுங்கள். நான், பிசிசிஐ-யின் வழிகாட்டு நெறிமுறைப்படி 14 நாட்கள் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளேன். ஐக்கிய அரபு அமீரகத்தில் அணியுடன் இணைய எனக்கு இன்னும் இரண்டு நெகட்டிவ் முடிவு தேவை" எனவும் அவர் தெரிவித்தார். (4)

# சென்னை அணிக்காக டோனி 2022 வரை விளையாடுவார்

## தலைமைச் செயல் அதிகாரி தகவல்



சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக 2022 ஆம் ஆண்டு வரை டோனி விளையாடுவார் என சுப்பர் கிங்ஸ் அணியின் தலைமை செயல் அதிகாரி காசிவிஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி 2008 ஆம் ஆண்டு ஆரம்பமாகிய பொழுதே சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவராக டோனி காணப்படுகின்றார். அனைத்து சீசன்களிலும் அணியை 'பிளே-ஒப்' சுற்றுக்கு அழைத்துச் சென்ற பெருமை டோனிக்கு உண்டு. ஐக்கிய அரபு அமீரகத்தில் அடுத்த மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகும் 13 ஆவது ஐ.பி.எல். போட்டிக்கு 39 வயதான டோனி தயாராகி வருகிறார். டோனி குறித்து சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைமை செயல் அதிகாரி காசிவிஸ்வநாதன் நேற்று முன்தினம் அளித்த ஒரு பேட்டியில்,

'இந்த ஆண்டு மட்டுமின்றி அடுத்த ஆண்டிலும் டோனி சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் அங்கம் வகிப்பார் என்று எதிர்பார்க்கின்றோம். அநேகமாக 2022 ஆம் ஆண்டு கூட அவர் சென்னை அணிக்காக விளையாடுவார். டோனி தனது சொந்த ஊரான ராஞ்சியில் உள் விளையாட்டு அரங்கில் பயிற்சி மேற்கொண்டார் என்பதை ஊடகம் மூலமே அறிகிறேன். ஆனால் டோனி குறித்து எங்களுக்கு எந்தக் கவலையும் இல்லை. ஏனெனில் அவருக்கு தன்னையும் தனது அணியையும் எப்படிப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பது அவருக்கு நன்கு தெரியும்' என்றார்.

இதே கருத்தை சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் மூத்த வீரரான அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஷேன் வோட்சனும் கூறியுள்ளார். அவர் அளித்த பேட்டியில், 'டோனி இன்னும் விளையாடுவதை விரும்புகிறார்.

அவர் எப்போதுமே மதிப்புமிக்க வீரர். அவரது திறமையையும், வெளிப்படுத்தும் கடின முயற்சியையும் பார்க்கும் போது அவரால் 40 வயதை கடந்தும் விளையாட முடியும். அவர் தனது உடல் தகுதியை சிறந்த முறையில் கவனித்துக் கொள்கிறார். நான் டோனியின் தீவிர ரசிகன். சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காகவோ அல்லது சர்வதேச கிரிக்கெட் போட்டியிலோ அவர் தொடர்ந்து விளையாடுவதை பார்க்க விரும்புகிறேன் எனவும் வோட்சன் தெரிவித்தார். (4)

# இலங்கைக்கு வருகை தரும் பங்களாதேஷ் வீரர்கள்

இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் தொடரானது இம்மாதம் 24 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இத்தொடரில் விளையாடவுள்ள பங்களாதேஷ் கிரிக்கெட் அணியினரும் பி.சி.பியின் உறுப்பினர்களும் இம்மாதம் 23 அல்லது 24 ஆம் திகதியன்று இலங்கை வருவார்கள் என்றும் கூறப்படுகின்றது.

சுற்றுப்பயணத்தின் முதல் மூன்று வாரங்களுக்கான இரண்டு பயணக் குழுக்களின் செலவுகளை பங்களாதேஷ் கிரிக்கெட் வாரியம் ஏற்றுள்ளது.

நாட்டுக்கு வருகை தரும் பங்களாதேஷ் கிரிக்கெட் வாரிய உறுப்பினர்களும் வீரர்களும் போட்டியில் கலந்து கொள்வதற்கு முன்னர் 14 நாட்கள் தனிமைப்படுத்தலில் வைக்கப்படவுள்ளனர்.

இதற்காக ஹோட்டல்களில் ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தச் சுற்றுப்பயணத்தில் மூன்று டெஸ்ட் போட்டிகள் அடங்கும் என்று பாகிஸ்தான் கிரிகெட் வாரிய செயற்பாட்டுத் தலைவர் அக்ரம் கான் உறுதிப்படுத்தியுள்ளதுடன் இவை அனைத்தும் கொழும்பில் நடைபெறும்.

இது தொடர்பில் அக்ரம் கான் தெரிவிக்கையில்,

மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு - 20 தொடரையும் வாரியம் முன்மொழிந்துள்ளது, ஆனால் அது நடைபெற வாய்ப்பில்லை.

"மூன்று டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவது உற்சாகமாக இருக்கிறது, ஆனால் வீரர்கள் கடந்த ஐந்து அல்லது ஆறு மாதங்களாக விளையாடாததால் இது ஒரு கடினமான நேரமாகக் காணப்படும்" என்றும் அவர் தெரிவித்தார். (4)


**யாழ்.வணிகர் கழகம்**
**வருடாந்த பொதுக்கூட்டம்**

2020 வருடத்திற்கான வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நடைபெறவுள்ளது.

**திகதி** : 05.09.2020 சனிக்கிழமை
**நேரம்** : காலை 10.00 மணி
**இடம்** : யாழ்.வணிகர் கழகப் பணிமனை
165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

செயலாளர்
யாழ்.வணிகர் கழகம்.


# நியூஸிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் நான்கு அணிகள்



நியூஸிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ள நான்கு அணிகள் தயாராக உள்ளதாக நியூஸிலாந்து கிரிக் கெட் சபை தெரிவித்துள்ளது.

இதற்மைய இந்த வருட இறுதி முதல் நியூஸிலாந்தில் சர்வதேச கிரிக்கெட் தொடர்கள் நடைபெறவுள்ளன.

மேற்கிந்தியத் தீவுகள், பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, பங்களாதேஷ் ஆகிய அணிகள் நியூஸிலாந்துக்குச் சென்று சர்வதேசத் தொடர்களில் விளையாடவுள்ளன.

மேற்கிந்தியத் தீவுகள், பாகிஸ்தான் ஆகிய அணிகள் டெஸ்ட் மற்றும் இருபது -20 தொடர்களில் விளையாடவுள்ளன. பங்களாதேஷ் அணி ஒரு நாள் மற்றும் இருபது -20 தொடர்களிலும் அவுஸ்திரேலிய அணி இருபது-20 தொடரிலும் விளையாடவுள்ளன.

அனைத்து அணிகளும் நியூஸிலாந்துக்கு வருகை தர சம்மதம் தெரிவித்துள்ளதாக நியூஸிலாந்து கிரிக்கெட் சபையின் தலைவர் டேவிட் வயிட் தெரிவித்துள்ளார். இதனால் 37 நாட்களுக்குச் சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் நியூஸிலாந்தில் நடைபெறும் எனவும் அவர் நம்பிக்கையுடன் உள்ளார். (4)

# பாகிஸ்தான்-இங்கிலாந்து டெஸ்டில் இடம்பெற்ற சுவாரஸ்ய சம்பவம்



பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில், ஐ.சி.சி. விதிமுறைகளை மீறியமைக்காக வேகப்பந்து வீச்சாளர் ஸ்டூவர்ட் பிராட்டுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த போட்டியில், பாகிஸ்தானின் 2 ஆவது இன்னிங்ஸில் 46 ஆவது ஓவரில் யாசிர் ஷாவை வீழ்த்திய பிறகு அவரிடம் தகாத வார்த்தைகளைக் கூறியதற்காக பிராட்டுக்கு ஆட்ட நடுவரான அவரது தந்தை கிறிஸ் பிராட்டின் அவரது சம்பளத்திலிருந்து 15% அபராதம் விதித்துள்ளார். இது அவரது சம்பளத்தின் £ 2,000 என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஐ.சி.சி. விதிமுறைகளை மீறியமைக்காக கடந்த 24 மாதங்களில் மூன்று அபராத புள்ளிகளை இவர் பெற்றுள்ளார்.

இதேவேளை டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், தந்தை மகனுக்கு அபராதம் விதித்த முதல் சந்தர்ப்பம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடத்தப்பட்ட

## 5 மில்லியன் ரூபாய் பெறுமதியான மஞ்சள் பொலிஸாரால் மீட்பு

(கொழும்பு)

**இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக கடல் வழியாக கல்பிட்டிய பகுதிக்கு எடுத்துவரப்பட்ட 1.5 தொன் மஞ்சள் கல்பிட்டிய பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது**



இதுதொடர்பில்மேலும்தெரிய வருவதாவது,

நேற்று இந்திய கடற்பரப்பினூடாக கல்பிட்டிய பகுதிக்கு கொண்டு வரப்பட்டு கடற்கரைப் பகுதியிலிருந்து விநியோகத்திற்காக எடுத்துச்செல்லப்பட தயார் நிலையிலிருந்த 5 மில்லியன் ரூபாய் பெறுமதியுடைய மஞ்சள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

எனினும் இது தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் தகவல் அறிந்து தாம் வரும் முன்னர் தப்பிச்சென்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (2)

## தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 35 பேர்

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் செயற்பாடுகளை நிறைவு செய்த 35 பேர் நேற்று அவர்களது வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என கொவிட்-19 கட்டுப்பாட்டுக்கானதேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. நாட்டிலுள்ள 40 தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் தொடர்ந்து 3 ஆயிரத்து ஐந்நூற்று 40 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.


இதேவேளை நேற்றையதினம் 16 தொற்றாளர்கள் பூரண குணமடைந்து வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறியுள்ளனர். கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் அடையாளம் காணப்பட்டவர்களில் 460 பேர் இதுவரை பூரண குணமடைந்துள்ளமைகுறிப்பிடத்தக்கது. (2)

## கிரிக்கெட் விளையாட்டிற்கு மட்டுமல்ல அனைத்து விளையாட்டுக்களுக்கும் நானே அமைச்சர்

### நாமல்

(கொழும்பு)

கிரிக்கெட்டுக்காக மட்டும் நியமிக்கப்பட்ட அமைச்சர் நான் அல்ல என விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகாரத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



கண்டியில் உள்ள தலதா மாளிகையில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டார்.

இந்த நிலையில், இலங்கை கிரிக்கெட் அணியில் தற்போது தோன்றியுள்ள நெருக்கடிக்கு நீங்கள் என்ன நடவடிக்கை எடுப்பீர்கள் என அவரிடம் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், பலரும் கிரிக்கெட்டின் மறுமலர்ச்சியில் கவனம் செலுத்தினாலும் நான் கிரிக்கெட்டுக்கு மட்டும் நியமிக்கப்பட்ட ஒரு அமைச்சர் அல்ல என்பதனை முதலில் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். நான் அனைத்து விளையாட்டுக்களுக்கும் நியமிக்கப்பட்ட ஒரு அமைச்சர் என தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட்டை கவனிக்க தனிக் குழு இருப்பதாகவும் முன்னாள் வீரர்களுடன் கலந்தாலோசித்து கிரிக்கெட் விளையாட்டை மறுசீரமைக்க நடவடிக்கை எடுப்பேன் என்றும் அவர் உறுதி அளித்துள்ளார். (2)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2085

### நைதஸா

என் மகன் மிகவும் புத்திசாலி.
ஒரு தீப்பெட்டி வாங்கினால் அதில்
ஐம்பது குச்சி இருக்கான்னு
எண்ணிப்பார்த்துத் தான்
வாங்கிவிட்டு வருவான்...





என் மகன் உங்கள் மகனைவிட
புத்திசாலி.எல்லா குச்சியும்
எரியுதான்னு கொளுத்திப்
பார்த்துவிட்டுத் தான்
வாங்கிக் கொண்டு வருவான்...

### ம்ருதா

வாழ்க்கையில் சோகங்கள்
அடைமழையாக விழுந்தாலும் சரி
ஆலங்கட்டி மழையாக விழுந்தாலும் சரி



சும்மா எருமமாட்ல மழை பெய்த மாதிரி
அசையாம நிக்க கத்துக்கனும்...

### யுகேஷ்

வாழ்க்கையில் ஆயிரம் ஆயிரம்
துன்பங்கள் இருந்தாலும்,
ஒவ்வொரு சின்ன சின்ன
சந்தோசங்களையும்
ரசிக்க தெரிந்தவனே,
வாழ்க்கையை வாழத் தெரிந்தவன்...



### ஹிசார்

சீனாவில் திரையரங்குகள்
திறக்க அனுமதி!
உலகம் முழுசுமே அவங்க
ரிலீஸ் பண்ண படம் தானே
ஓடிக்கிட்டு
இருக்கு...?




### துயேஷ்

வேலைக்கு போறவர்களுக்கு
வேலை செய்யும் இடத்திலே
மட்டும் தான் பதில்
சொல்ல வேண்டும்...
வேலைக்கு போகாதவர்களுக்கோ
பாக்குறவனுக்கெல்லாம்
பதில் சொல்ல வேண்டும்...
இப்பொழுது சொல்லுங்கயாருக்கு
வேலை ஜாஸ்தினு...

### துவாகரி

பஸ்ஸில் நாம தூங்கினா அது
சொகுசுப் பயணம்



டிரைவர் தூங்கினா அதுவே இறுதிப் பயணம்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஒன்லைன் மூலம் பதிவு செய்த 69 பாராளுமன்ற உறுப்பினர்கள்



(கொழும்பு)

பாராளுமன்ற செயலகத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்லைன் முறையினை பயன்படுத்தி இதுவரை புதிய பாராளுமன்றத்தின் 69 உறுப்பினர்கள் தங்களது விபரங்களை பதிவு செய்துள்ளனர்.

ஓகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஒன்பதாவது பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள உறுப்பினர்களின் தகவல்களை ஒன்லைன் முறையில் (Online Registration System) பெற்றுக்கொள்ளும் முறையொன்று பாராளுமன்ற செயலகத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, அனைத்து உறுப்பினர்களும் தமது தகவல்களை வழங்குவதற்கு பாராளுமன்றத்தின் இணையத்தளத்துக்கு பிரவேசித்து ஒன்லைன் விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்த முடியும் என பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தஸநாயக்க அறிவித்தல் விடுத்துள்ளார்.

இந்தத் தகவல் வழங்கும் நடவடிக்கைகளை நாளை 15 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக தற்பொழுது பாராளுமன்றத்தினுள் காணப்படும் தகவல் தொழிநுட்ப முறைமைகளைப் பயன்படுத்தி ஒன்லைன் மூலம் தகவல்களைத் திரட்டுவதாகவும் செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

அதேபோன்று உறுப்பினர்களின் வசதி கருதி இந்த முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர்கள் பாராளுமன்றத்துக்கு வருகைதராமல் தேர்தல் தொகுதிகளில் இருந்தே இந்த நடவடிக்கையை மேற்கொள்ள முடியும் என தம்மிக தஸநாயக்க மேலும் தெரிவித்தார்.

அதற்கமைய, ஒன்பதாவது பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள உறுப்பினர்கள் https://registration.parliament.lk எனும் இணைய பக்கத்திற்கு பிரவேசித்து உரிய கடவுச்சொல்லை பயன்படுத்தி இந்த விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ள முடியும். இந்த கடவுச்சொல் தொடர்பில் அறிவுறுத்துவதற்கு பாராளுமன்ற பணியாட்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கடந்த 11 ஆம் திகதி அலரி மாளிகையில் உத்தியோகபூர்வமாகப் பணிகளைப் பொறுப்பேற்று சிறிது நேரத்தின் பின்னர் இந்த ஒன்லைன் விண்ணப்பப் படிவத்தில் தனது தகவல்களைப் பூரணப்படுத்தி பாராளுமன்ற செயலகத்திடம் ஒப்படைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (2)

# செய்தித்துளிகள்

## நாடு திரும்பிய இலங்கையர்கள்

(கொழும்பு)

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் கட்டார் ஆகிய நாடுகளிலிருந்து மொத்தம் 299 இலங்கையர்கள் நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி டோஹாவிலிருந்து கட்டார் எயர்வேஸ் விமான நிறுவனத்துக்கு சொந்தமான கியூ.ஆர் - 668 என்ற விமானத்தில் 15 பேர் நேற்று அதிகாலை 1.45 மணிக்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்களில் 10 பேர் பயணிகள் ஆவர். மீதமுள்ள ஐந்து பேர் இலங்கையில் உள்ள இத்தாலிய மற்றும் பிரெஞ்சு தூதரகங்களின் அதிகாரிகள் ஆவர்.

மேலும் ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான யு.எல்-226 என்ற விமானத்தில் 289 இலங்கையர்கள் நேற்று அதிகாலை 5.30 மணிக்கு மத்தள விமான நிலையத்தை வந்தடைந்தனர். இவர்களுள் ஆறு குழந்தைகளும் அடங்குவர்.

விமான நிலையத்தை வந்தடைந்த பயணிகள் அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

## இலங்கையர்களுக்கு மீண்டும் விசா வழங்கும் மலேசியா

(கொழும்பு)

தொழில்வாய்ப்புகளுக்காக மலேசியா செல்லும் இலங்கையர்களுக்கு விசா வழங்கும் நடவடிக்கையை மீண்டும் ஆரம்பிக்க மலேசிய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

அதன்படி இலங்கையர்களுக்கான இந்த விசாக்களை எதிர்வரும் டிசெம்பர் 31 ஆம் திகதிக்குப் பின்னர் மீண்டும் வழங்க மலேசிய அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளது.

மலேசியாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலய அலுவலகம், முதலில் வீட்டுப் பணியாளர்களாக வேலை செய்ய விண்ணப்பிப்பவர்களுக்கு விசா வழங்கப்படும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. (2)



# ஆன்மீகம்

## எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும்!

"பந்திக்கு முந்து படைக்குப் பிந்து" என்கிற பழமொழியைப் பரவலாகப் பலரும் பயன்படுத்தி வருகிறார்கள். நம் முன்னோர்களின் வீரத்தைப் புலப்படுத்துவதற்கென்றே சங்க நூலாகிய 'புறநானூறு' இருக்கிறது. வீரம் செறிந்த நம்மவர்களிடையே இப்படி ஒரு வித்தியாசமான பழமொழி ஏன் என்று சிந்திக்கிறீர்களா? அது பழ்மொழியே அல்ல! விடுகதை! சற்று மாறிப் போய் வழங்கப்பட்டு வருகிறது. பந்திக்கு முந்தும்! படைக்குப் பிந்தும்! அது என்ன? என்று கேட்டால் கை என்று பதில் வரும். சாப்பிடும்போது கை வளைந்து கொடுத்து முந்துகிறது.

வில்லிலே அம்பு வைத்து விடுக்கும் போது கை வளைந்து கொடுப்பதால் தானே அறுசுவை விருந்தை ஐந்து நிமிடத்தில் முடிக்க முடிகிறது. ஒரு அரசர் பெரிய விருந்து ஒன்று வைத்து அனைத்து மக்களையும் அழைத்தார்.

அவர் ஆண்ட பகுதியில் இருவேறு கருத்துகள் கொண்டு இயங்கி வந்த சங்கங்கள் இருந்தன. ஒரு சங்கத்தினரை இன்னொரு சங்க உறுப்பினர்கள் ஏறெடுத்தும் பார்க்க மாட்டார்கள். அப்படி ஒரு ஜென்மப் பகை. ஆனால் அரசருக்கு அவர்கள் ஒரு சங்கமாக இயங்க வேண்டும் என்று ஆசை. அதற்காகத்தான் அனைவரையும் அழைத்து விருந்து வைத்தார்.

எல்லோரும் வந்தார்கள். முதலில் சாப்பிட்டு விட்டு வாருங்கள். பிறகு பேசுவோம் என்றார். எதிரெதிர் அணியினர் எதிரெதிராக அமர வேண்டும். எல்லோரும் சாப்பிடலாம். ஆனால் ஒன்று முழங்கையை மடக்கக் கூடாது என்றார் அரசர்.

முழங்கையை மடக்காமல் எப்படிச் சாப்பிடுவது? சங்கடப்பட்டு நெளிந்து கொண்டிருந்த இரு குழுவினரிடையே 'ராஜகுரு' வந்தார்.

"ஏன் சாப்பிடாமல் இருக்கிறீர்கள். கையை மடக்காமலேயே எல்லோரும் சாப்பிட முடியுமே! கையால் விருந்தை எடுத்து எதிரெதிரே உட்கார்ந்திருப்பவர்கள் வாயில் இரு அணியினரும் ஊட்டி விடுங்களேன்" என்றார். அடுத்த சில நிமிடங்களில் அவர்களிடமிருந்த விரோதம் தீர்ந்தது. இலையில் பரிமாறப்பட்ட விருந்தும் தீர்ந்தது.

**உலகம் உண்ண உண்! உடுத்த உடுப்பாய்!**

**புவியை நடத்து! பொதுவில் நடத்து!**

**மானிட சமுத்திரம் நான் என்று கூவு!**

**என்று மார் தட்டுகிறார் பாவேந்தர் பாரதிதாசன்.**

வளர்ந்து வரும் இந்த விஞ்ஞான யுகத்தில் ஒருவருக்கொருவர் முகம் கொடுத்துப் பேசுவது கூட அரிதாகி விடுகிறது. திட்டுத் திட்டாகத் தீவினை போல் பலரும் பிரிந்து நிற்கிறார்களே தவிர மானிட சமுத்திரம் நான் என்று கூவுவதற்கு மருந்துக்குக்கூட ஒருவர் இல்லை. பல்வேறு குழுக்கள். ஒவ்வொரு குழுவினருக்குள்ளேயே ஓராயிரம் பிரச்சினைகள். கூட்டுக் குடும்ப வாழ்க்கை குலைந்து போய் அப்பா, அம்மா, மகன், மகள்தான்! அவர்களுக்குள்ளேயாவது அந்நியோன்னியம் இருக்கின்றதா? தனித்தனி அறைகள்! ஒவ்வொருவர் அறையிலும் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி, கணனி, தொலைபேசி. ஒருவருக்கொருவர் கலந்து பேசாமல், சிரித்து மகிழலாம், சேர்ந்து சாப்பிடாமல் வாழ்வதும் ஒரு வாழ்வா? இறைவன் நமக்குத் தந்த மனிதம் என்னும் மாபெரும் வரத்தை சாபம் ஆக்கிக் கொண்டு வாழ்வதில் என்ன சந்தோசம் இருக்கிறது? அமெரிக்காவில் ஒரு மதிய நேரத்தில் கொளுத்தும் கோடை வெயிலில் படிகளில் தள்ளாடி ஏறியபடி வங்கிக்குள் வந்தார் முதியவர் ஒருவர்.

(தொடரும்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 130 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 160 | 160 | 200 | 200 |
| தக்காளி | 80 | 80 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 110 | 110 | 80 |
| கோவா | 160 | 130 | 130 | 120 |
| கரட் | 120 | 150 | 160 | 150 |
| பூசணி | 80 | 80 | 80 | 100 |
| புடோல் | 60 | 80 | 60 | 100 |
| வாழைக்காய் | 120 | 120 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 110 | 120 | 150 |
| பெரிய வெங்காயம் | 80 | 110 | 100 | 120 |
| பாகற்காய் | 160 | 150 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | -- | 140 |
| பயற்றங்காய் | 80 | 80 | 60 | 80 |
| லீக்ஸ் | 100 | 90 | 100 | 100 |
| பீற்றூட் | 120 | 100 | 100 | 120 |
| கறிமிளகாய் | 360 | 320 | 260 | 300 |
| முருங்கைக்காய் | 140 | 120 | 100 | 80 |
| போஞ்சி | 200 | 250 | 280 | 280 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | -- | 120 |
| கீரை - 1 பிடி | 40 | 50 | 30 | 50 |
| தேசிக்காய் | 150 | 150 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 60 | 60-80 |
| இராசவள்ளி | -- | -- | -- | -- |
| வெங்காயப்பூ | 250 | 240 | 160 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 50 | 30 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 40 | 80 | 50 | 60 |




## மாப்பிள்ளைகளை எல்லாம் தூக்கில் போடு

அக்பர் ஓர்நாள் கோபக் கனல் தெறிக்க சபையில் அமர்ந்திருந்தார். அன்றையதினம் சபைக்கு அக்பரின் மருமகன் வந்திருந்தார்.

தம் மகளை அனுப்பி வைக்கும்படி அவரிடம் கேட்டுக் கொண்டார் அக்பர். ஆனால், மருமகன் அனுப்பி வைக்க மறுத்துவிட்டார்.

அக்பர் சொல்லி, யாருமே எதையுமே எப்பொழுதுமே மறுத்ததில்லை. ஆனால் தன் மருமகனின் மறுப்பு, அவருக்கு அவமானமாக இருந்தது.

அவனுக்குத் தகுந்த தண்டனை கொடுக்க வேண்டும் என்று நினைத்தார்.ஆகவே பீர்பாலை வரவழைத்து, இராச்சியத்திலுள்ள எல்லா மருமகன்களையும் தூக்கில் போடும்படி உத்தரவிட்டார். உத்தரவைக் கேட்ட மக்கள் அனைவரும் திகிலடைந்தார்கள்.

இராச்சியத்திலுள்ள ஒவ்வொருவரும் யாருக்காவது எப்பொழுதாவது மருமகனாகத்தானே இருப்பார்கள்.

பீர்பால் அரசரின் உத்தரவுப்படி நாளை தூக்கில் போடுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்யத் தொடங்கினார்.

பீர்பால் அனைத்து ஏற்பாடுகளையும் முடித்துவிட்டு அரசரிடம் சென்று தூக்கில் போடுவதற்கு முன் அரசர் வந்து தான் செய்த ஏற்பாடுகள் அனைத்தும் சரியாக உள்ளதா என ஒரு தடவை பார்த்துவிடும்படி கேட்டுக் கொண்டார்.

பீர்பால் செய்திருக்கும் அனைத்து ஏற்பாடுகளும் திருப்தியளிக்கும் வகையில் இருந்தது. ஆனால் அக்பருக்கு ஒரு சந்தேகம். பீர்பால் நீண்ட வரிசையில் ஏராளமான தூக்கு மரங்களை நிறுவியிருந்தார்.



ஆனால் நீண்ட வரிசையின் முடிவில் இரண்டு தூக்கு மரங்கள் தங்கத்தாலும் வெள்ளியாலும் நிறுவியிருந்ததைப் பார்த்தார். அக்பருக்கு ஒன்றும் புரியவில்லை.

உடனே அக்பர் பீர்பாலிடம் இந்த இரண்டு விசேட தூக்கு மரங்கள் யாருக்காக எனக் கேட்டார்.

பீர்பால், சக்கரவர்த்தியாரே, தமக்குத்தான் தங்கமரம். தமது ஊழியனாகிய எமக்கு வெள்ளி மரம் என்றார். அதற்கு அக்பர் எனக்குத் தங்கமரமா? என்னை யார் தைரியமாக தூக்கில் போடுவது? என்று கேட்டார் அக்பர். நீங்களாகவே என்றார் பீர்பால்.

"நீங்களும் நானும் உட்பட எல்லோரும் யாருக்காகிலும் மருமகன்களே. அதனால் தங்களுக்காக விசேடமாகத் தங்கத்தினால் தயாரித்தேன்.

முதலாவதாக நீங்களும், அடுத்தபடியாக நானும். நாளையே ஆரம்பிக்கலாம் என்றும் மற்றவர்களை அடுத்த படியாக நிறைவேற்றலாம்" என்று கூறினார் பீர்பால்.

உடனே அக்பர் எத்தகைய முட்டாள்தனமான உத்தரவைப் போட்டு விட்டோம் என்பதை உணர்ந்ததோடு, அரண்மனைக்குத் திரும்பியதும் உடனடியாக இரத்துச் செய்து விட வேண்டும் எனத் தீர்மானித்தார்.

**நீதி: கோபத்தில் முடிவு எடுக்கக்கூடாது.**

## ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

### சோழவளநாடு சோறுடைத்து...

36


சென்னையின் பழைய நிலை

நகரமென்பது பொருளாதார வளர்ச்சியால் உருவாவது. இன்றைய சென்னை ஒரு காலத்தில் ஏரிகளும் வயல்வெளிகளும் கொண்ட கிராமமாகக் காட்சியளித்தது. பிறகு பொருளாதார வளர்ச்சி அதை மாநகரமாக மாற்றியிருக்கிறது.

ஆனால் தஞ்சை நகரத்தின் வளர்ச்சியும் மக்களின் வாழ்க்கைத் தரமும் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று ராஜராஜனால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டவை.

தமிழ்நாடு, நிலநடுக்கோட்டை ஒட்டிய வெப்ப மண்டலப் பகுதியைச் சேர்ந்தது. சோழர் காலத்தில் மக்களின் முதன்மைத் தொழிலாக இருந்தது வேளாண்மை. வேளாண் பொருளாதாரம் சார்ந்த அரசு ராஜராஜனுடையது.

இதனால் வேளாண் தொழிலுக்கு எவ்விதப் பாதிப்பும் வராமல் மக்களையும் பயிர்களையும் காக்க வேண்டும் என்பதில் எப்போதும் கவனமாக இருந்தார்.

வாளின் துணைகொண்டு இராச்சியம் நடத்திய ராஜராஜன் இன்னொரு பக்கம் குடிமக்களின் நலனிலும் அதிக அக்கறை எடுத்துக்கொண்டது மக்களின் அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஒரு பக்கம் போர்களுக்கான ஆயத்தங்கள் நடந்துகொண்டிருந்த போது இன்னொரு பக்கம் மக்கள் வளர்ச்சிப் பணிகளும் மளமளவென நடைபெற்றுக் கொண்டிருந்தன. இந்த இரண்டுக்கும் சமஉரிமை கொடுத்து ஆட்சி நடத்திய ஆபூர்வ அரசர் ராஜராஜன்.

தஞ்சைக்கு சிறப்புத் தருவது காவிரியாறு. மேலணைக்கு அருகே காவிரி இரண்டாகப் பிரிகிறது. ஒன்று காவிரி, மற்றொன்று கொள்ளிடம். இவற்றில் காவிரியாறு தஞ்சை மாவட்டத்திற்குள் நுழைந்த பிறகு பல கிளைகளாகப் பிரிகிறது.

வெண்ணாறு, குடமுருட்டியாறு, அரசலாறு போன்றவை முக்கியமான சில கிளை ஆறுகளாகும். இவற்றில் வெண்ணாறும் குடமுருட்டியாறும் தஞ்சை நகருக்குள்ளே பாய்ந்து ஓடுவதால் தஞ்சையில் பசுமைக்கும் செழுமைக்கும் பஞ்சமில்லை.

நீர்நிலைகளுக்குத் தமிழர்கள் வெவ்வேறு பெயர்களை வழங்கி வந்தார்கள்.

சுனை, கயம், பொய்கை, ஊற்று, குட்டை, குளம், ஊருணி, ஏரி, கண்மாய் என்று நீரின் ஒவ்வொரு உபயோகத்துக்கும் ஒவ்வொரு பெயர்கள்.

இதில் ஏர் தொழிலுக்குப் பயன்படும் நீர்நிலைகளை ஏரிகள் என்றழைக்கப்பட்டன. ராஜராஜன், ஏரிகளை வெட்டுவதற்கு மிகவும் நாட்டம் செலுத்தினார்.

சூரியன் எப்படி ஓர் இயற்கையின் பேராற்றலோ அதுபோல நீரும் இயற்கை வழங்கும் இன்னொரு மகத்தான கொடை என்கிற உண்மையை ராஜராஜன் மிகவும் உணர்வுபூர்வமாகப் புரிந்து கொண்டிருந்தார்.

(தொடரும்)

துணிச்சலோடு உழைப்பவனுக்குத்தான் வெற்றி அருகில் வந்து அமரும். பயப்படுகிறவரை அது திரும்பிக்கூட பார்ப்பதில்லை. - ஜவகர்லால் நேரு

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யூத இனத்தவர்கள் போல நாமும் தமிழர்களாக...

உலகில் யூத மக்கள் பட்ட துன்ப துயரங்கள் சொல்லிமாளா. யூதர்கள் மீது நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதல்கள் அவர்களை உலகம் முழுமைக்கும் பரவச் செய்தது.

இவ்வாறு யூதர்களை வெளியேற்றுவதன் மூலம் தங்களின் இருப்பை நிலைப்படுத்த முடியும் என்று நினைத்தவர்கள் ஈற்றில் படு தோல்வி கண்டனர்.

போர்க் கொடுமை காரணமாகத் தம் நாட்டை விட்டு வெளியேறிய யூதர்கள் உலகம் முழுவதிலும் வாழத் தலைப்பட்டனர்.

உலகின் எந்த நாட்டில் அவர்கள் வாழ்ந்தாலும் அவர்கள் யூதர்களாகவே வாழ்ந்தனர். வாழ்கின்றனர்.

இதுவே யூத இனம் இன்று அறிவாற்றல் மிகுந்த இனமாக மிளிர்ந்து கொண்டிருக்கக் காரணமாயிற்று.

யூத மக்களை நினைக்கும்போதெல்லாம் எம் ஈழத் தமிழினம் பற்றிய நினைவே நம் உள்ளத்தைத் தொட்டுச் செல்லும்.

இலங்கையின் ஆதிக்குடிகளான தமிழ் மக்கள் சிறுபான்மை என்ற ஒரே காரணத்துக்காக, பெரும்பான்மைச் சிங்களத் தரப்புகள் தமிழ் மக்களுக்குச் செய்யும் அக்கிரமம் கொஞ்சமல்ல.

இலங்கை பௌத்த சிங்கள நாடு என்பதை நிலைநிறுத்துவதற்காகத் தமிழ் இனத்தை வேரறுக்க நினைத்து காலத்துக்குக் காலம் தமிழ் மக்களைச் சங்காரம் செய்கின்ற அக்கிரமம் நடந்தாகிறது.

தவிர, தமிழ் மக்களின் வரலாற்றுத் தொன்மங்களை அழித்துத் துவம்சம் செய்வதிலும் வீறு கொண்ட முனைப்பு எழுகை பெற்றிருப்பதை நாம் காண முடியும்.

இவற்றின் பின்னணியில் பௌத்த துறவிகள் செயலாற்றுகின்ற கொடுமையை சொல்ல வார்த்தை இல்லை.

இவ்வாறான சூழ்நிலையில் தமிழ் மக்கள் தங்கள் இருப்பை, உரிமையை, இனத்துவத்தைக் காக்க யூதர்கள் போல செயற்பட வேண்டியுள்ளது.

ஆம், இலங்கையில் நடந்த யுத்தம் தமிழ் மக்களை உலகெல்லாம் வாழ வைத்துள்ளது.

உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் சிந்தையெல்லாம் தங்கள் தாய்த் தமிழ் மீதாக இருப்பதைக் கண்டு புளகாங்கிதம் அடையாமல் இருக்க முடியாது.

எனினும் என்னோடு தமிழ்ப்பற்று நின்று போகாமல் என் பிள்ளை, பிள்ளையின் பிள்ளை என்றவாறு புலம்பெயர் தேசத்து நம் உறவுகள் செயலாற்றினால், தமிழ் இனத்தை எவராலும் எதுவும் செய்துவிட முடியாது.

இதேவேளை இலங்கைத் திருநாட்டில் இருக்கின்ற அத்தனை தமிழ் மக்களும் தமிழ் உணர்வோடு வாழ்வார்களாயின் தமிழர் தேசத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கும் அத்தனை நாசகாரங்களையும் அடித்து நொருக்கி விட முடியும்.

எனவே தமிழ்ப் புத்திஜீவிகள் மற்றும் அனைத்து அரச பணியாளர்கள், மாணவர்கள், வர்த்தகப் பெருமக்கள், அரசியல் தரப்பினர் என அனைவரும் தமிழ் எங்கள் மூச்சு என்று நினைத்தால் அதை வெட்டி விழுத்த எவராலும் முடியாது என்பதே நிஜம்.

# கட்டுப்பாடுகளைத் தளர்த்த கல்வி அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாக கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட ஆலோசனைக் கோவையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இருநூறுக்கும் அதிகமான மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகளிலேயே இவ்வாறு திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

200 இற்கும் அதிகமான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில், கல்வி நடவடிக்கைகளுக்காக ஒவ்வொரு தரத் திற்கும் வெவ்வேறு தினங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், கொரோனா வைரஸ் தொற்றின் தற்போதைய நிலையைக் கருத்திற் கொண்டு அந்தக் கட்டுப்பாடுக்ளைத் தளர்த்துவதற்கு தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். இதனடிப்படையில், சுகாதார வழிமுறைகளுக்கு ஏற்ப கல்வி நடவடிக்கைகளை தொடர முடியுமாயின் வழமை போன்று மாணவர்களை பாடசாலைக்கு அழைப்பதில் எவ்வித தடையும் இல்லை எனக் கல்வி அமைச்சு அதிபர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. (2)

## அங்கொட லொக்காவின் சகாவை தேடும் பணி முன்னெடுப்பு

(கொழும்பு)

அங்கொட லொக்கா எனப்படும் பாதாள உலகக்குழுத் தலைவருடன் இணைந்து செயற்பட்ட மற்றுமொருவரைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்த, சொல்ட்டா எனப்படும் அசித ஹேமதிலக என்பவருடனும் குறித்த சந்தேக நபர் நெருங்கி செயற்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதனை அடுத்து, ஜிலே எனப்படும் அன்வர் என்கின்ற குறித்த நபரைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஜிலே எனப்படும் அன்வர் மற்றும் சொல்ட்டா எனப்படும் அசித ஹேமதிலக ஆகிய இருவரும், மோட்டார் சைக்கிளில் சென்று துப்பாக்கிப் பிரயோ கங்களை மேற்கொண்டுள்ளதாகவும் குறித்த இருவரும் நான்கு கொலைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

## வவு. சேமமடுப் பகுதியில் யானைகள் அட்டகாசம்

### இரண்டு வீடுகள் சேதம்

(வவுனியா)

வவுனியா சேமமடுப் பகுதியில் நேற்றைய தினம் அதிகாலை ஊருக்குள் புகுந்த யானைகள் இரண்டு வீடுகளை சேதப்படுத்தி சென்றுள்ளதுடன், வீட்டில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த நெல்லினையும் உண்டுவிட்டு சென்றுள்ளன.

சேமமடு கிராமத்தில் தொடர்ச்சியாக யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருவதுடன் இதனால் பயிர்ச்செய்கை உட்பட ஏனைய செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாமல் இருப்பதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிப்பதுடன் நீண்ட காலமாக தொடர்ந்து வருகின்ற இப் பிரச்சினையை நிவர்த்தி செய்து யானைகளின் அட்டகாசத்தை கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை சேமமடுப் பகுதியில் யானையின் தாக்குதலிற்கு இலக்காகி கடந்த வருடத்தில் ஒருவர் மரணமடைந்திருந்ததுடன், ஒருவர் காயமடைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3,299)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

துணிச்சலோடு உழைப்பவனுக்குத்தான் வெற்றி அருகில் வந்து அமரும். பயப்படுகிற வரை அது திரும்பிக்கூட பார்ப்பதில்லை.

-ஜவஹர்லால் நேரு.

## சலூன் உடைத்து வவுனியாவில் திருட்டு

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் சலூன் ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த பணம் திருடப்பட்டுள்ளதாக நேற்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் உள்ள சலூன் ஒன்று பூட்டப்பட்டிருந்த நிலையில் இரவு அதன் கதவை உடைத்து உள்ளே சென்ற நபர்கள் அங்கு உள்ள பண வைப்புப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்த 12 ஆயிரம் ரூபாய் பணத்தை திருடிச் சென்றுள்ளனர். காலை அதன் உரிமையாளர் சென்ற போது சலூன் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டிருந்தது தெரியவந்துள்ளது.

இதனையடுத்து வவுனியா பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து சிசிரிவி கமரா வீடியோவின் உதவியுடன் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3,250)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

ஒரு கானகத்தில் விலங்கு மாநில மாநாடு கூடிற்று. அதில் தலைமை தாங்கிய சிங்கம் "விலங்குத் தோழர்களே உயிர் வாழ்க்கைக்கு ஆடை அவசியமா? மனிதர்கள் ஆடைக்கு அவசியமின்றி அதிகம் செலவழிப்பது அறிவின்மையாகும். அது வருந்தத்தக்கது, கண்டிக்கத்தக்கது" என்று கூறிற்று. இதுபோல் மனித வாழ்க்கைக்கு கடவுள் வணக்கம் தேவையா? நாங்கள் கடவுளை வணங்காமல் வாழவில்லையா? என்று வினவுவார்கள்.

மானம் உள்ளவன் ஆடை உடுப்பான்
மனம் உள்ளவன் இறைவனை வணங்குவான்

(தொடரும்)

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### பூஜைக்குரிய மலர்கள்

வானை நோக்கி வளர்கிறது மரம். அது ஒளியின் மீது கொண்ட நாட்டத்தின் அழகான குறியீடு மலர். ஒவ்வொரு மலருக்கும் ஒரு நிறம் உண்டு, மணம் உண்டு. அதேபோல் ஒவ்வொரு மலருக்கும் தனித் தனிக் குணம் உண்டு என்கிறது ஆன்மீகம்.

நமது உடலுக்குப் பலமும், மனதுக்கு நலமும், வாழ்வுக்கு வளமும் சேர்க்கிற ஆற்றல் மலருக்கு உண்டு. மலர் தூவி இறைவனை வழிபடுங்கள், நீங்கள் எண்ணியனவெல்லாம் இயன்றிவிடும். எல்லாம் இறைவன் அருள்.

**வெண் தாமரை மலர்**

**மலரின் பண்பு :** நீரில் விளையும் மலர். இலைக் காம்பு பூக்காம்பை விட அதிக நீளமாகும். பூ மருத்துவ குணமுடையது. காம்புகள் துவர்ப்பும் குளிர்ச்சியும் உடையவை.

இந்தப் பூ வெப்பத்தால் பிறந்த விழி எரிச்சலை, ஜ்ரத்தைப் போக்கும். ஆண்மையின்மையை நீக்கும். இரத்தக்கொதிப்பை அகற்றும். மூளைக்குப் பலம் சேர்க்கும்.

வெண்தாமரை வேர்க்கட்டுள்ள கிழங்கிலிருந்து நேராக வளரும் நீர்க்கொடி. வட்டமான பெரிய இலைகளை நீர்ப்பரப்பில் பெற்றிருக்கும். பெரிய மலர்களை உடையது. வெண்ணிற மலர்கள்.

**பலன்:** வெண்தாமரையைக் கொண்டு இறைவனைப் பூஜிக்கும் போது நமது தெய்வீக உணர்வு மேம்படும். மேனி பொலிவடையும். மனதில் உள்ள மாசுக்கள் அகன்று விடும். பெருமிதப்படுகின்ற வண்ணம் ஆற்றல் பெறுவோம். (தொடரும்)

# ஈழத்தை உலுக்கிய செஞ்சோலைப் படுகொலை






தமிழரின் நீண்ட சோகவரலாற்றில் இலங்கைப் படைகளின் ஈவிரக்கமற்ற தாக்குதல்களால் பரிதாபமாகக் கொல்லப்பட்ட 61 பிஞ்சுகளின் குருதியால் எழுதப்பட்டுள்ளது 2006 ஒகஸ்ட் 14.

பல நாடுகளுக்கு, இனங்களுக்கு ஒரு பொருட்டாக இல்லாது போனாலும் அழுது அழுது ஆற முடியாமல் அகதிகளாய் அலையும் தமிழினத்தால் இதனைத் தாங்கிக் கொள்ளும் சக்தி இல்லை என்றே கூறவேண்டும்.

முல்லைத்தீவு மாவட்ட வள்ளிபுனத்தில் செஞ்சோலைச் சிறுமிகள் இல்லத்தின் வளாகமே கடந்த 2006 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 14 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணியளவில் கண்மூடித்தனமாக வான் தாக்குதல்களுக்கு இலக்காகியது.

இலங்கை அரச படைகளின் நான்கு அதிவேக யுத்த விமானங்கள் மிலேச்சத்தனமாக வீசிய குண்டுகள் 61 பாடசாலை மாணவிகளின் உயிர்களைப் பறித்தும் 155 இற்கும் அதிகமான மாணவிகள் படுகாயமடைந்தும் இருந்தனர்.

கொல்லப்பட்டவர்களில் சிலரது உடல்கள் சிதறியபடி காணப்பட்டிருந்தன. காயமடைந்தவர்களில் 25 மாணவிகளது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்திருந்தன. காயமடைந்தவர்களில் பலர் அவயவங்களை இழந்திருந்தனர். சிலர் கைகள், கால்கள் இரண்டையும் இழந்திருந்தனர்.

ஸ்ரீசெஞ்சோலை வளாகத்தில் நடந்த செய்தி கேட்டு ஓடி வந்த தாயொருவர் பத்து நாள் கூட என்னால் விட்டிட்டு இருக்க ஏலாது என்று முதலில் மாட்டேன் என்றுதானே சொன்னேன். ஆனால் நல்ல விடயம் என்று எல்லோரும் சொன்னதால் தானே விட்டனான். கடைசியிலே இப்படிப் போய்ச்சு எனத் தலையில் அடித்து இறந்து கிடந்த மகளைத் தூக்கி வா வீட்டை போவம் என்று கேட்டதும் அங்கு நின்றவர்கள் கதறி அழுதனர்.

செஞ்சோலை வளாகத்தில் அப்பாவி மாணவிகளை இலங்கைப் படை கொன்றது மாத்திரமல்லாமல் கொல்லப்பட்டவர்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்திலுள்ள சிறுவர் போராளிகள் எனக்கூறி வெளியுலகிற்கு உண்மையை மூடி மறைக்க முயன்றது அனைவரையும் ஆத்திரமடையச் செய்தது.


செஞ்சோலை வளாகம் புலிகள் பயிற்சி பெறும் முகாம் என்றும் அங்கு சிறுவயதுப் போராளிகள் இருந்ததாகவும் கூறிய அரச படைகள் கொல்லப்பட்டது சிறுவயது போராளிகளே என்றும் அரசுக்கு எதிராகச் செயற்படும் எவராயினும் வயது, பால் வேறுபாடின்றி கொல்வோம் எனவும் கூறியிருந்தது.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கும் வைத்தியசாலைக்கும் நேரடியாகச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் யுனிசெப்பும் கொல்லப்பட்டவர்கள் அப்பாவி மாணவிகள் என்பதனை வெளிப்படுத்தியிருந்தது.

இலங்கைப் படை இம் மிலேச்சத்தனமான தாக்குதலின் பின்னர் அப்பகுதி வாழ் பொது மக்களினதும் போராளிகளினதும் மருத்துவர்களினதும் மீட்புப் பணிகளின் போதான பங்களிப்புக்கள் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாததும் வெட்டவெளிச்சத்திற்கு கொண்டு வரப்படாததுமாகும்.

# வீரமுனை படுகொலை நினைவுநாள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு





(அம்பாறை)

அம்பாறை மாவட்டம், வீரமுனையில் 232 தமிழர்கள் கொல்லப்பட்ட சம்பவம் இடம்பெற்று 30 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

இந்த படுகொலையினை நினைவுகூர்ந்து நேற்று முன்தினம் புதன்கிழமை வீரமுனையில் அமைந்துள்ள நினைவுத் தூபிக்கு முன்னால் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், தவிசாளர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

கடந்த யுத்த சூழ்நிலையில் சம்மாந்துறை பிரதேசத்தில் நிகழ்ந்த வன்செயல்கள் காரணமாக வீரமுனையையும் அதன் சுற்று வட்டக் கிராமங்களான வீரச்சோலை, மல்லிகைத்தீவு, மல்வத்தை, வளத்தாப்பிட்டி, சொறிக்கல் முனை, அம்பாறை பகுதிகளைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் தங்கள் வீரமுனை சிந்தா யாத்திரைப் பிள்ளையார் கோ்யில் வளவினுள்ளும் வீரமுனை இராமகிருஷ்ண மிஷன் பாடசாலை வளவினுள்ளும் தஞ்சம் புகுந்திருந்தனர்.

இந்த நிலையில் 1990ஆம் ஆண்டு ஓகஸ்ட் 12ஆம் திகதி மர்மக் குழுவினரால் 400இற்கும் அதிகமான பொது மக்கள் சுட்டும் வெட்டியும் கொலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# உயர்தர பரீட்சைக்கான திகதி அறிவிப்பு

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
பரீட்சைத் திணைக்களம் - இலங்கை
Department of Examinations - Sri Lanka

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைகளுக்காக நேர அட்டவணை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 12 ஆம் ஆரம்பமாகி நவம்பர் 6 ஆம் திகதியுடன் பரீட்சைகள் நிறைவடையவுள்ளன.

பழைய மற்றும் புதிய பாடத்திட்டகளுக்கான நேர அட்டவணை கல்வி அமைச்சின் www.doenets.lk என்ற உத்தியோக பூர்வ இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில் பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் மற்றும் நேர அட்டவணை என்பன விரைவில் பாடசாலைகளுக்கும் தனியார் பரீட்சார்த்திகளுக்கு வீடுகளுக்கும் அனுப்பி வைக்கப்படும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

## பெண்ணின்...

யில் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை காலை சடலம் ஒன்று சந்தேகத்திற்கு இடமான நிலையில் காணப்பட்டதைத் தொடர்ந்து குறித்த விடயம் தொடர்பாக மன்னார் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

குறித்த பகுதிக்கு விரைந்து வந்த மன்னார் பொலிஸார் சடலத்தை பார்வையிட்ட நிலையில் மன்னார் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

பெண் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டதோடு, பெண்ணின் உடலில் பலத்த காயங்கள் காணப்பட்டதுடன் இழுத்து செல்லப்பட்ட அடையாளங்கள், ஆண் ஒருவரின் பாதணி உட்பட சில தடயப் பொருட்களையும், சம்பவ இடத்தில் இருந்து விசேட தடயவியல் நிபுணத்துவ பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறித்த பெண் கொலை செய்யப்பட்டு இருக்கலாம் என்ற சந்தேகத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சடலமாக மீட்கப்பட்ட பெண் அடையாளம் காணப்பட வில்லை.

சடலம் பிரேத பரிசோதனைக்காக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-3,285)

## செஞ்சோலை...

தடை விதித்துள்ளனர்

முல்லைத்தீவு, வள்ளிபுனம் பகுதியில் அமைந்திருந்த செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் மீது 2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 14ஆம் திகதி இலங்கை விமா னப் படையினர் நடத்திய தாக்குதலில் 54 மாணவிகள் உட்பட 61 பேர் படுகொலை செய்யப்பட்ட னர்.

இந்த தினத்தினை நினைவுகூர்ந்து வருடந்தோறும் வள்ளிபுனம் இடைக்கட்டு சந்தியில் நினைவேந்தல் குழுவால் நினைவேந்தல் நிகழ்வுகள் நடத்தப்படும்.

அதற்கமைய இம்முறையும் இன்று வெள்ளிக்கிழமை காலை நினைவேந்தல் நிகழ்வுகள் நடத்த ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இதனையடுத்து, ஏற்பாட்டாளர்களான ஈசன் மற்றும் ரூபன் ஆகியோரை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்த புதுக்குடியிருப்பு பொலிஸார், நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த முடியாது எனத் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்த உத்தரவை மீறிநிகழ்வை நடத்தினால் கைது செய்யப்படு வீர்கள் என பொலிஸார் எச்சரிக்கை விடுத்ததாக நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-3,281)

## பாராளுமன்ற...

முள்ளிவாய்க்காலில் அமைக்கப்பட்டிருக்கின்ற நினைவு தூபியில் நேற்றுஅஞ்சலி நிகழ்வை மேற்கொண்டார்.

இந்நிகழ்வில் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பங்காளி கட்சிகளின் தலைவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (ம-3,8,281)

## பாராளுமன்றம்...

செல்லவுள்ள முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் கஜேந்திரன் ஆகியோர் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு முள்ளி வாய்க்காலில் உறுதிப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கட்சியின் பொதுச் செயலாளர் கஜேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார். (ம-3)

## பொதுமக்கள்...

யிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலிலே மக்கள் தமது தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். அந்த மக்கள் தீர்ப்பு மதிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இந்தத் தேர்தலில் எந்தவொரு அணியினருக்கும் அவர்கள் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை.

அத்துடன் இந்தத் தேர்தல் அரசியல் கட்சிகளுக்கிடையேயும் கட்சிக் குள்ளேயும் பல முரண்பாடுகளும் ஜனநாயக விரோதப்போக்குகளும் தலைதூக்கியிருப்பது வேதனையானது. இதனால் மக்கள் குழப்பமும் கவலையும் அடைந்திருக்கிறார்கள். ஒவ்வொரு தரப்பும் மறுதரப்பை விமர்சனம் செய்வதிலும் பார்க்க சுய விமர்சனம் செய்து தத்தமது நடவடிக்கைகளை நெறிப்படுத்திக் கொள்வது ஆரோக்கியமானதாக அமையும்.

தீய நோக்கங்களுக்காக தவறான கருத்துக்கள் பதிவிடப்படுவதும் அவற்றின் உண்மைத்தன்மை அறியாது அவை பகிரப்படுவதும் குழப்பநிலைகள் மேலும் அதிகரிக்க வழிவகுக்கும். கருத்துக்கள் பதிவிடப்படும்பொழுது பிறரின் மனம் நோகாது சரியான, நாகரிகமான வார்த்தைப் பிரயோகங்களுடன் உண்மையை எழுதிக்கொள்வது தமிழரின் மரபுக்கு வலுச்சேர்க்கும்.

ஒருவரில் பழி தீர்ப்பதற்காக ஊடகங்களைப் பயன்படுத்துவது அறம் ஆகாது. இவை சமூகங்களுக்கிடையே பிரிவினையை வளர்த்துக் கொள்வதற்கே வழிவகுக்கும்.

சமூக ஒற்றுமை என்பது தேசியத்தின் அடிநாதம். ஒற்றுமையில்லாது வெறுப்புக்கள் நீரூற்றி வளர்க்கப்படின் தேசியம் மடிந்து போகும் ஒரு துர்ப்பாக்கிய நிலை தோன்றலாம். ஒரு சமூகம் அங்கு நடைபெறும் நல்ல விடயங்களைக் கண்டறிந்து ஊக்கப்படுத்துமாயின், அது வளர்ச்சி பெறுவதுடன் ஒற்றுமையும் மேலோங்கும். எதையும் சந்தேகக் கண்ணுடன் நோக்கி தீய சம்பவங்களை மட்டுமே வடித்தெடுத்து அநாகரிகமாக விமர்சிப்பது பிரிவுகளை ஆழமாக்கும்.

காலத்தின் தேவைகருதி தமிழ்மக்கள் பேரவையானது தமக்கென ஒரு புதிய யாப்பினை அறிமுகம் செய்யவிருக்கின்றது.

இது தேர்தல் அரசியல் கடந்து தமிழ் மக்களின் ஒற்றுமைக்கும் அவர்களின் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கும், அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்கும் வழிசமைக்கும்.

இந்த முயற்சியில் பொது அமைப்புக்களினதும், பொதுமக்களினதும் பெரும் பங்களிப்பு எதிர்பார்க்கப்படுகின்றது. பொது மக்கள், அரசியல்வாதிகளை வழிநடத்தும் ஒரு பொறிமுறை நோக்கி முயற்சி எடுக்க தமிழ்மக்களை அணிதிரள அழைக்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## சபாநாயகராக...

சாங்கத்தின் அமைச்சரவை பதவி ஏற்ற போது அந்த நிகழ்வில் மைத்திரிபால சிறிசேன பங்கேற்றபோதும் அவருக்கு பதவி வழங்கப்படவில்லை.

மைத்திரிபால கடந்த பொதுத் தேர்தலில் பொலநறுவையில் அதிக விருப்பு வாக்குகளை பெற்று வெற்றி அடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## சர்வாதிகார...

றன என்ற எமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகின்றது.

தமிழ் மக்களுடைய உரிமைகள் கிடைக்க வேண்டுமென்றால் முள்ளிவாய்க்காலில் இறந்தவர்களின் சார்பாக அவர்களின் குடும்பங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்.

அவர்களுக்கு கிடைக்கப் பெறும் நீதியின் அடிப்படையிலேயே எமக்கான அரசியல் தீர்வுகள் அமையும். தற்போதைய அரசாங்கம் எல்லா வகையிலும் ஒரு இராணுவ ரீதியான நிர்வாகத்தை கொண்டு வரும் முயற்சியில் உள்ளது.

ஜனாதிபதி கோட்டா ஹிட்லர் போன்று சர்வாதிகார ஆட்சியை முன்னெடுத்தாலும் ஆச்சரியப்பட முடியாது.

ஆனால் இதற்காக எமது உரிமைகள், எமது தாயகம் என்ற எண்ணம் எல்லாம் ஒருபோதும் தேய்வடைந்துவிடாது. தற்போதைய அரசாங்கம் எல்லா வகையிலும் இராணுவ ஆட்சி என்று தெரியப்படுத்தாது ஜனநாயக முறையிலே இராணுவ ஆட்சியை ஏற்படுத்த முனைகின்றது.

சர்வாதிகாரத்துக்குரிய சகல தகைமைகளையும் தற்போதைய அரசாங்கத்தில் காணக்கூடியதாகவுள்ளது.

ஆனால் அதற்காக நாம் பயந்துவிடப் போவதில்லை. எமக்கான வேலைகளை நாம் சிரிவரச்செய்து கொண்டே செல்வோம் என தெரிவித்தார்.

இவ் அஞ்சலி நிகழ்வில் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனுடன் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன் மற்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-3,8,281)

## பாடசாலை மாண...

பாட சாலை மாணவன் ஒருவர் அடையாளம் காணப்பட்டதாக அந்தப் பகுதி சுகாதார வைத்திய அதிகாரி சந்தியா அபேரத்ன தெரிவித்துள்ளார்.

இரஜாங்கனை யாய 5 நவோத்யா வித்தியாலயத்தில் 11ஆம் வகுப்பில் கற்கும் 16 வயதுடைய மாணவனுக்கே கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

அந்த பிரதேசத்தில் முதல் முறையாக கொரோனா தொற்றுக்குள்ளான நபரின் வீட்டிற்கு முன்னால் இந்த மாணவன் வசித்து வருகின்றார்.

பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 102 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 101 பேர் ஆரோக்கியமாக உள்ளவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றுக்குள்ளான மாணவன் சிரி செவன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனினும் குறித்த மாணவன் கற்கும் பாடசாலையில் உள்ள மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இது வரையில் பாடசாலை மூடப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் ஏனைய பாடசாலைகளை மூடுவதற்கு தீர்மானிக்கவில்லை என தம்புத்தேகம கல்வி வலய இயக்குநர் ஜீ.கே.ஆர்.எம்.கே.பண்டார தெரிவித்துள்ளார். (ம-3)

மெகா பவர்
திகதி 13/08/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0580
G 14 40 42 48 56

மஹஜன சம்பத
திகதி 2020/08/13
சீட்டிழுப்பு இலக்கம் 4213
ஆங்கில எழுத்து Y
வெல்லப்பட்ட இலக்கங்கள் 7 4 7 2 8 4
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 13-08-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2508
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 29 49 51 58
தேசிய லொத்தர் சபை

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1604 திகதி 2020/08/13
V 15 46 67 73
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1191
சீட்டிழுப்பு திகதி 13.08.2020 வியாழக்கிழமை
Q 03 08 24 44
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,436,757.20
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 1009
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.08.13
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 60,367,200/-
வெற்றி இலக்கங்கள் 02 06 64 75
ஆங்கில எழுத்து D

ராசி அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2890 வர்ணம் கபிலம் திகதி 13.08.2020
வெற்றி இலக்கங்கள் 01 25 52 58 கன்னி
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ.2,557,085
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1680
சீட்டிழுப்பு திகதி 13/08/2020
வெற்றி இலக்கங்கள் 02 23 32 35
ஆங்கில எழுத்து J
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 52,049,368
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

# முள்ளிவாய்க்காலில் பாராளுமன்ற கன்னிப் பயணத்தை தொடங்கிய விக்னேஸ்வரன்





பாராளுமன்றத்துக்குத் தெரிவான முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தனது கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களுடன் முள்ளிவாய்க்காலில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் சுடர் ஏற்றி, மலர்தூவி வணக்கம் செலுத்தி தனது பாராறுமன்ற அரசியல் பயணத்தை ஆரம்பித்தார். (ம-3,8,281)

# முக்கிய அமைச்சுக்களின் செயலாளர்களாக முன்னாள் இராணுவ அதிகாரிகள் நியமனம்

(கொழும்பு)

நேற்று முன்தினம் பதவிப்பிரமாணம் செய்து கொண்ட அமைச்சர்களுக்கு உரிய 25 அமைச்சுக்களுக்கான செயலாளர்கள் நேற்று ஜனாதிபதியினால் நியமிக்கப் பட்டுள்ளனர்.

இவர்களில் பாதுகாப்பு, வெளியுறவு, சுகாதாரம், மற்றும் கமத்தொழில் அமைச்சுக்களின் செயலாளர்களாக படை அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

- வெளியுறவு அமைச்சு - அட்மிரல் ஜயநாத் கொலம்பகே
- பாதுகாப்பு அமைச்சு - மேஜர் ஜெனரல் (ஓய்வு) கமால் குணரத்ன
- சுகாதார அமைச்சு- மேஜர் ஜெனரல் சஞ்சீவ முனசிங்க
- கமத்தொழில் அமைச்சு - மேஜர் ஜெனரல் ஏ.கே.சுமேத பெரேரா

இதேவேளை இதுநாள்வரை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமாக இருந்த வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க சுற்றுச்சூழல் அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (ம-03)

## புதிய அமைச்...

கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

அதற்கு உரித்தான நியமனங்கள் அந்த நோக்கத்துக்காக நியமிக்கப்பட்ட சிறப்புக் குழுவால் மேற்பார்வை செய்யப்படும்.

இது தொடர்பான உத்தரவு அனைத்து அமைச்சர்களுக்கும் ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.ஜெயசுந்தர அனுப்பி வைத்துள் ளார். (ம-3)

## மாவை- சுமந்தி...

யர் ஒருவருக்கு சொந்தமான விடுதியில் சுமார் 3 மணித்தியாலமாக இச் சந்திப்பு இடம்பெற்றது.

மாவை சேனாதிராஜாவிற்கு எதிராக சதி நடவடிக்கையில் ஈடுபட்டதாக சுமந்திரன் தரப்பினர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள நிலையில், மாவை சேனாதிராஜாவுடனான இணக்கப்பாட்டு முயற்சியில் சுமந்திரன் தரப்பு தீவிரமாக ஈடுபட்டு வந்தது.

இதற்காக யாழ். பல்கலைகழக மருத்துவ பீடாதிபதி வைத்தியர் ரவிராஜ் தரப்பை சுமந்திரன் அணுகியிருந்தார். இதன்படி மாவை சேனாதிராஜாவை அவரது வீட்டில் சந்தித்து பேசிய வைத்தியர் குழு, நேற்று மாவை சேனாதிராஜாவை நேரடி பேச்சுக்கு அழைத்திருந்தனர்.

கச்சேரிக்கு அண்மையிலுள்ள வைத்தியர் ஒருவரின் விடுதியில் வைத்தியர் குழுவினருடன் பேச்சுவார்த்தை என மாவை சேனாதிராஜா அழைக்கப்பட்டிருந்தார். எனினும், அங்கு திடீரென எம்.ஏ. சுமந்திரனும் பிரசன்ன மாகியிருந்தார்.

மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன், மருத்துவபீடாதிபதி ரவிராஜ் மற்றும் சில வைத்தியர்கள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

காரசாரமாக நீண்டநேரம் பேச்சுக்கள் நடைபெற்றது. (ம-3)

## ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்தத் தயார்

### சஜித் தரப்பு அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்த தயார் என ஐக்கிய மக்கள் சக்தி தெரி வித்துள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 20ஆம் திகதி புதிய பாராளுமன்றம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், பேச்சுவார்த்தைக்கு தயார் என அக்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறிருப்பினும் ஐக்கிய தேசியக் கட்சி அதற்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் திஸ்ஸ அத்தநாயக்க கூறியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களுடன் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயலாற்றுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தபடுமானால் அதற்கு எமது தரப்பும் தயாராகவுள்ளது.

அனைவரது கருத்துக்களையும் இணைத்து கொண்டு பயணிப்பது அவசியமாகவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)


**இந்திய சாஸ்திரியார் வருகை**

ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
சிங்கப்பூர்,மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் பெற்ற
**இரத்தினசாமி** அவர்கள்
ஜாதகம், கைரேகை, எண்கணிதம்
திருமணத்தடை, கல்வித்தடை, வெளிநாடு செல்லத்தடை
மற்றும் குழந்தைப் பாக்கியம், காதலில் தோல்வி, குடும்பத்தில்
பிரச்சினை, தொழில் முன்னேற்றமின்மை, புதிய தொழில்
தொடங்க மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் தொடர்பு கொள்ளவும்.
(3513)
முன்பதிவுக்கு: 071 574 8358, 071 392 9703, 076 682 7368
இல.101, Kandy Rd, jaffna (யாழ்.நீதிமன்றத்திற்கு அருகில்)

**DCMN யாழ். நகர்**
யா/ வேம்படி மகளிர் கல்லூரி அருகில்
**A/L 2022**
வர்த்தக பிரிவு புதிய இறுதிப் பிரிவு
ஆரம்பம் :- நாளை 9 A.M
" பாடம் மாறிக் கற்போருக்கும் இடம் மாறிக் கற்போருக்குமானது "
கடந்த வருட இறுதிப் பெறுபேற்றில்
யாழ். நிலை 01, 02 மற்றும் தொடர்
நிலை சாதனைகளை
உருவாக்கிய நிறுவனம்.
**T.P : 077 011 9434**
(3576) - நிர்வாகம் -

**விரைவு பொதிகள் சேவை**
**V2 TRAVELS**
வழமைபோல வெளிநாடுகளுக்கு
பொதிகளை எமக்கூடாக
அனுப்பிவைக்க முடியும்
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய்
● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-006)
0768226240

**மீண்டும்**
**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை**
அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த
எமது சேவை மீண்டும் வழமைபோல்
அனைத்து நாடுகளுக்கும்
**100%** பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.
(C-009)
**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113
**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536

**பிரத்தியேக குழு வகுப்புக்கள்**
தரம் 06 முதல் O/L வரை கணிதமும்
தரம் 10, 11 ற்கான வணிகக்
கல்வியும் கணக்கீடும், ICT
ஆகிய பாடங்கள் உங்கள் வீடுகளுக்கு
வந்து தனியாகவோ/ குழுவாகவோ
கற்பிக்கத்தக்க ஆசிரியர்கள்
எம்மிடம் உண்டு. (3565)
**தொடர்பு : 077 645 2622**

**நெல்லியடி உயர் கல்லூரியில் போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**
◆ முகாமைத்துவ உத்தியோகத்தர்
◆ இறைவரி உத்தியோகத்தர்
◆ பதிவாளர் சேவை
◆ புகையிரத அலுவலர் சேவை
(C-046)
நாளை (15.08.2020) சனி
மு.ப 10.30 மணிக்கு ஆரம்பம்.
உயர் கல்லூரி நெல்லியடி
HNB Assurance கட்டடம் மேல்மாடி
தொடர்புகளுக்கு - 077 435 0958

**சிங்களம் கற்பிக்கப்படும்**
**மாணவர்கள் உட்பட அனைத்து**
**தரப்பினர்களுக்கும்** எழுத, பேச,
வாசிக்க வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி,
முல்லைத்தீவு, மன்னார், வவுனியா,
மட்டக்களப்பு அனைத்து
மாவட்டத்தினருக்கும். (3571)
**தொடர்பு : 076 796 0761**

**AMC ACADAMY**
BMC LANE, CLOCK TOWER ROAD, JAFFNA
போட்டிப் பரீட்சைகளுக்கான வகுப்புக்கள்
முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்,
புகையிரத நிலைய காப்பாளர்,
சட்டக் கல்லூரி அனுமதி
துறைசார்ந்த நிபுணர்களின் வழிகாட்டல்.
(3578)
**T.P : 077 694 4543**


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.